சேவாஸ்ரமம்

சிறப்பு மலர் · 1967

SEVASRAMAM, TIRUVANNAMALAI



வணக்கம்


SEVASRAMAM, TIRUVANNAMALAI.

SEVASRAMAM, TIRUVANNAMALAI


"என் கடன் பணி செய்து கிடப்பதே"




பிள்ளையார் பட்டி
கற்பக விநாயகர்



ஸ்ரீ உண்ணாமுலை உடனாகிய
ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான்



திருவண்ணாமலை
மலை—ஆலயம்—இந்திர தீர்த்தம்



திருவண்ணாமலை
ஆலயத்தின் மேல் தோற்றம்

சேவாஸ்ரமம்
நிர்வாகக் குழுவினர்

தலைவர் :

ஸ்ரீமத் அருணாசல ஸ்வாமிகள் அவர்கள்
தலைவர். கா. செ. மடாலயம், காளையார் கோவில்

உப தலைவர்கள் :

ஸ்ரீமத் ஸ்வாமி ஆத்மானந்தஜீ மஹராஜ் அவர்கள்
தலைவர். ஸ்ரீ நாராயண சேவாஸ்ரமம், காஞ்சிபுரம்
ஸ்ரீமத் வீர. சு. ஷண்முகானந்த ஸ்வாமிகள் அவர்கள்
தலைவர். ஸ்ரீ குரு தெட்சிணாமூர்த்தி ஸ்வாமிகள் மடம், திருவாரூர்
ஸ்ரீமத் திருச்சி ஸ்வாமிகள் அவர்கள்
தலைவர். ஸ்ரீ கைலாஸ் ஆஸ்ரமம், பெங்களூர்
ஸ்ரீமத் இராமானந்த ஸ்வாமிகள் அவர்கள்
தலைவர். ஸ்ரீ சபாபதி ஸ்வாமிகள் மடம், மேட்டுப்பாளையம்

செயலாளர் :

ஸ்ரீமத் இராமநாத ஸ்வாமிகள் அவர்கள்
தலைவர். ஈசான்ய மடம், திருவண்ணாமலை

உதவிச் செயலாளர் :


ஸ்ரீமத் சதானந்த ஸ்வாமிகள் அவர்கள்
ஸ்ரீ குரு தெட்சிணாமூர்த்தி ஸ்வாமிகள் மடம், திருவாரூர்

பொருளாளர் :

ஸ்ரீமத் அம்பலவாண ஸ்வாமிகள் அவர்கள்
தலைவர். பவழக்குன்று மடம், திருவண்ணாமலை

உறுப்பினர் :

ஸ்ரீமத் கந்தசாமி ஸ்வாமிகள் அவர்கள்
தலைவர். ஸ்ரீ ஷண்முக ஸ்வாமிகள் மடம், வளவனூர்
ஸ்ரீமத் கோபாலானந்த ஸ்வாமிகள் அவர்கள்
ஸ்ரீ நாராயண சேவாஸ்ரமம், காஞ்சிபுரம்



1. ஸ்ரீமத் அருணசல ஸ்வாமிகள்.
2. ஸ்ரீமத் ஸ்வாமி ஆத்மானந்தஜீ மஹராஜ்
3. ஸ்ரீமத் வீர.சு.ஷண்முகானந்த ஸ்வாமிகள்
4. ஸ்ரீமத் திருச்சி ஸ்வாமிகள்
5. ஸ்ரீமத் இராமானந்த ஸ்வாமிகள்
6. ஸ்ரீமத் இராமநாத ஸ்வாமிகள்
7. ஸ்ரீமத் சதானந்த ஸ்வாமிகள்
8. ஸ்ரீமத் அம்பலவாண ஸ்வாமிகள்
9. ஸ்ரீமத் கந்தசாமி ஸ்வாமிகள்
10. ஸ்ரீமத் கோபாலானந்த ஸ்வாமிகள்

கல்வி நிலைய நிர்வாகக் குழுவினர்

தலைவர்

ஸ்ரீமத் திருச்சி ஸ்வாமிகள்


மானேஜர் & கரஸ்பாண்டண்ட்

ஸ்ரீமத் இராமநாத ஸ்வாமிகள்


உறுப்பினர்

திரு. S. S. V. S. முத்தைய செட்டியார்
" T. V. சுப்பிரமணிய செட்டியார்
" T. S. முத்துக்குமாரஸாமி முதலியார்
" T. S. கிருஷ்ணசாமி முதலியார்
" N. துரைசாமி பிள்ளை
" R. நாராயணசாமி ரெட்டியார்
" M. பாலகிருஷ்ண ரெட்டியார்
" A. அண்ணாமலை முதலியார்
" S. ஜெயராம் பிள்ளை


கல்வி நிலைய நிர்வாகக் குழுவினர்




ஸ்ரீலஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள்
(தலைவர்)



ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஸ்வாமிகள்
(மானேஜர் & கரஸ்பாண்டண்ட்)



திரு. S. S. V. S. முத்தைய செட்டியார்




திரு. T. V. சுப்பிரமணிய செட்டியார்


கல்வி நிலைய நிர்வாகக் குழுவினர் (தொடர்ச்சி)




திரு. T. S. முத்துக்குமாரசாமி முதலியார்



திரு. T. S. கிருஷ்ணசாமி முதலியார்




திரு. நா. துரைசாமி பிள்ளை




திரு. R. நாராயணசாமி ரெட்டியார்


கல்வி நிலைய நிர்வாகக் குழுவினர் (தொடர்ச்சி)




திரு. M. பாலகிருஷ்ண ரெட்டியார்



திரு. A. அண்ணாமலை முதலியார்



திரு. S. ஜெயராம் பிள்ளை




சேவாஸ்ரமம் உயர் நிலைப் பள்ளி

SEVASRAMAM, TIRUVANNAMALAI


புரவலர்கள்



S. RM S.
நாராயணன் செட்டியார்
காரைக்குடி



S. N. A. S. A.
அண்ணாமலை செட்டியார்
காரைக்குடி




P. V. RM
குழந்தையன் செட்டியார்
இராயவரம்

கட்டுரையாளர்கள்



இராய. சொ.



சா. கணேசன்



பி. ஸ்ரீ.


உள்ளுரை

———:o:———

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ மடம் காஞ்சிபுரம்



திருவண்ணுமலையில், சேவாஸ்ரமம் ஒன்று ஏற்படுத்தி, அதன்மூலம் சிறுவயதில் அறிந்துகொள்ள வேண்டியதும் அவசியமுமான பணிகளை நடத்தி வருவதை தெரிந்து, ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் மிகவும் ஸந்தோஷமடைவதுடன் ஷை ஆச்ரமம் மேன்மேலும் வளர ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் ஆசிர்வதிக்கிறார்கள்.

ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அருள் மொழி

"ஈஸ்வரன் நமக்குச் செல்வத்தைக் கொடுக்கிறார். அதைக்கொண்டு நாம் பரோபகாரம் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு தர்மம் செய்யவேண்டும்."

"அன்னதானத்திலும் சிறந்தது வித்யாதானம். தர்மப் பள்ளி நிறுவிப் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டலாம்."


"ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த தர்மத்தைச் செய்துவந்தால் உலகத்தில் துன்பமே இருக்காது. ஒவ்வொருவரும் தங்கள் கஷ்டங்களைப் பாராட்டாமல் பிறர் துயரங்களை நீக்கினால் உலகம் முழுவதும் ஒற்றுமையாக வாழ முடியும்."

உ

ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

திருக்கோவிலூர்

ஸ்ரீ ஸத்குருநாதன் துணை நிற்க



அன்பும் பண்பும் நிறைந்தொழுகும் பக்த சிகாமணிகட்கு அறிக்கை


ஆண்டவன் திருவருள் கடாக்ஷ செயலால் சிற்றறிவுள்ள ஆன்மா, அறிவுடன் மக்கள் பிறவியெடுத்து பிறவிப் பிணி நீங்கி பேரின்ப நிலையெய்துவது அப்பிறவியின் பயன். அஃது அடைவதற்கு உலகஅறிவும், உடல்நினைவும் உள்ளத்தில் ஒடுங்கும் வரையில் அதற்கிசைய உயரிய செயலாற்றி உலகில் அனைத்துயிரும் இன்புற வேண்டும் என்ற கருணை நோக்கம் கொண்டு பணியாற்றுவது அறிஞர்கள் இயல்பு.

வட ஆற்காடு ஜில்லாவில் சிறப்புற்ற ஆலயங்களில் மக்கள் தெய்விக நெறியறிந்து வழிபடும் தெய்வத்தலங்களில் மேன்மையுற்றுள்ளது அருணையம்பதி. அப்பதியில் சுமார் நூறு ஆண்டுக்கு முன் அரிய தவம்புரிந்து பெறும் பேற்றைப் பெற்று பிறவிக்கடல் கடந்த ஜீவன் முக்தர், ஈசான்ய மடம் ஸ்ரீ கந்தப்ப ஞான தேசிகர் என்ற திருநாமத்துடன் விளங்கி உலகம் போற்ற மக்கள் துயரம் மாற்றி இன்பநிலை காட்டி வந்தார். அந்த மடத்துக்கு தற்சமயம் சிலஸ்ரீ ராமனந்தஸ்வாமிகள் தலைமை தாங்கி பொறுப்புக் கொண்டு தலைவர் சென்ற வழியைப் பின் பற்றி அரிய பெரிய செயலாற்றி உலகமக்கள் சீருற்று நன்னெறி பெற்றுய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டு அதற்கிசைந்த இடமும், ஏவலும், தக்கவர்கள் அளிக்கும் பொருளும் கொண்டு ஒரு 'அனாதை விடுதி' யமைத்து அதற்காகச் செய்து வரும் தொண்டு பாராட்டத்தக்கது. நல்லறிஞர்கள் இதற்கு ஆதரவும் தங்களாலியன்ற உதவியும் புரிந்து ஏழைகளான அனாதைக் குழந்தைகள் கல்வித் துறையிலும் நல்லொழுக்கத்திலும் வளர்ச்சி பெற்று மக்கள் பிறவியில் மேம்பாடடைய சீருற்ற நெறியில் வாழ்வதற்கு நல்வழி காட்டி நல்லொழுக்கத்துடன் வாழ்க்கைப் பயன் பெற்று வருவது போற்றத்தக்கது. இவ்வாசிரமத்தின் தற்காலத் தலைவர் ஈசான்யமடம் ஸ்ரீ ராமனந்த ஸ்வாமிகள் அருணாசலேசுவரர் திருவருள் பெற்று உயரிய தொண்டு புரிவது அனைவரும் அறிந்த விஷயம்.

ஆகவே மேற்படி அனாதை விடுதிக்குப் பெருமக்கள் பேருதவி புரிந்து அனாதைக் குழந்தைகளைப்போற்றி வளர்ப்பதற்கு அன்னம், உடுக்க உடை, ஆரோக்ய வாழ்க்கைக்கு மருந்து, படிப்புக்குத் தகுந்த இடவசதிகள், புத்தகங்கள், இவைகளை அமைத்துக் கொடுத்து, நல்லாசிரியர்கள் வசதியுடன் தங்கி மாணவர்களை நன்னெறிப்படுத்தி மாணவர்கள் நல்வாழ்வு நடந்து எல்லோரும் மேன்மையடைய ஸ்ரீ அருணாசலேசுவரர் அருள் புரிவாராக.

எல்லா ஏற்பாடுகளையும் நன்கு கவனித்து உயர் தொண்டு புரியும் ஸ்ரீ ராமனந்த ஸ்வாமிகளின் நன்முயற்சிகள் பயனடைய இறைவன் அருள்புரிவாராக.

(ஒப்பம்) ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமி
தபோவனம்.



ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை

திருவண்ணுமலை சேவாஸ்ரமம் சிறப்புமலர் ஒன்று வெளியிடத்திட்டம் போட்டிருப்பது பாராட்டுதற்குறிய விஷயமாகும். அம்மலர் கவர்ச்சிகரமாகவும் நல்ல கருத்துக்களும் புள்ளிவிவரங்களும் படங்களும் அடங்கப் பெற்றதாகவும் அமைவது உசிதம்.

நிலவளத்தையும் நீர் வளத்தையும் அமைத்துத் தருவது தோட்டக்காரனுடைய கடமை. பின்பு செடியானது தனது ஆற்றலுக்கும் அமைப்புக்கும் ஏற்றவாறு வளர்ந்து வருகிறது. தேர்ச்சி பெற்றுள்ள ஒரு தோட்டக்காரனது நிலையில் இருந்து கொண்டு சேவாஸ்ரமம் தனது கடமையை ஆற்றி வருகிறது. அதில் வளர்க்கப் பெறும் சிறுவர்களும் நல்ல பாங்கில் முன்னேறி வருகிறுர்கள். வளர்ப்பவர்களுக்கும் வளர்க்கப் பெறுபவர்களுக்குமிடையில் உள்ள அன்பு கனிந்த இணக்கம் பெறுதற்கு அரிய வாய்ப்பு ஆகும். சேவாஸ்ரமம் அதில் சிறப்புற்று விளங்குகிறது. மற்ற வசதிகளைப் பணம் படைத்தவர்கள் அமைத்துக் கொடுக்க முடியும். ஆனுல் அன்பைப் பொருள் கொடுத்து வாங்க முடியாது. அது அருளில் உதிக்கிறது. சேவாஸ்ரமம் சிறுவர்களுக்கு அருளையும் பொருளையும் சேர்த்துப் பணியாற்றி வருகிறது. அந்த அளவில் அவர்கள் பாக்கியவான்கள்.

இந்த புனிதமான ஸ்தாபனம் யாண்டும் மேலோங்கி வருமாறு அண்ணுமலையானைப் பிரார்த்திக்கிறேன்.

சித்பவானந்த

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகள்

மதுரை ஆதீனம்.

எல்லாம்வல்லஎம்பெருமானது இன்னருளால் எல்லாநலங்களும் எய்துக. 29-ந் தேதி எழுதிய கடிதமும் அடக்கங்களும் கிடைத்தன. சேவாஸ்ரமத்தின் முக்கிய நோக்கங்களையும், அது செயல்படும் முறைகளையும் பார்த்து மகிழ்ந்தோம்.

தங்களுடைய சிரிய நோக்கங்களும், மேற்கொண்டிருக்கின்ற நல்லறங்களும், சிறந்து திகழவும், அதனல் நாட்டுமக்களும் நம் நாடும் நலம் பெறவும், திருவருள் பாலிக்குமாறு எல்லாம்வல்ல அண்ணுமலையானைப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்ருேம்.

ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகர்

தொண்டை மண்டலாதீனம் ஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் மடாலய

குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

பெரிய காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டம் தமிழ்நாடு.

திருவண்ணாமலை நினைக்க முத்தியளிக்கும் திவ்விய சிவஸ்தலம். அதில் யார் யார் எவ் வெந்நலம் புரிய நினைப்பினும் அவ்வவர் அவ் வந் நலங்களை நிறைவேற்றி யின்புறுவர்.

அங்குள்ள ஈசான்ய ஞான தேசிகர் மடால யம் மிக்க புகழ்பெற்றது. ஈசான்ய ஞாந தேசிகர் சாபாநுக்கிரக சாமர்த்தியர். திருவரு ளுருவாய் விளங்கியவர். அவர் வீற்றிருந்த காலத்தில் உலகெலாம் அவர் திருவருட் சிறப்பை உணர்ந்து போற்றி உய்வகை யறிந்து நலம் பலவும் எய்தி இனிது வாழ்ந்து விளங்கிய உண்மையைப் பழஞ் சான்றோர் பலர் இன்றும் சொல்வர்.

அம் மடத்தின் தலைவராக இப்போது விளங் கும் பெரியார் சிலத் திரு இராமநாத அடிகள் அவர்கள் இக் காலத்தின் தேவை யையும் மக்கள் பலர் வேண்டியவற்றையும் நோக்கி மேன்மையும் தெய்வசக்தியும் மிக்க சிலத் திரு திருச்சி சுவாமிகள் முதலான சான் றோர்கள் பலரின் அனுக்கிரகம் பெற்று திருவண்ணாமலையில் சேவாஸ்ரமம் ஒன்று நிறுவி எட்டு யாண்டுகள் ஆயின. சிறிதும் தன்நலம் கருதாது தனிப்பெறும் தொண்டே நோக்கமாக நிறுவியதால் இது நன்கு வளர்ந்து பெரும் பயன் விளைத்து வருகின்றது.

சிறந்த இடத்தில் காற்றோட்டம் முதலிய நல்லனவெல்லாம் பிள்ளைகள் பெறத்தக்க வாறு உயர்வும் உறுதியும் உள்ள கட்டிடங் களில் இவ்வாஸ்ரமம் அமைந்திருக்கின்றது.

வறிய சிறியவர் உறையுள், உணவு, உடை பேழை, நூல்கள், கிடக்கை முதலிய எல்லா சாதனங்களையும் பெற்று மிக்க இன்பம் உற் றுக் கற்றுவருகின்றனர். பிற்காலம் பெரிய ராக விளங்கும் பெற்றியில் உற்றுநோக்கிக் காத்துவரும் மெய்த் தொண்டர்கள் கண் காணிப்பில் மாணுக்கர்கள் வாழ்கின்றார்கள்.

இதன் நிருவாகத்தில் 'சேவாஸ்ரமம் கனகம் மாள் பால வித்தியாலயம்' கள்ளமில்லா உள்ளத் தவரான இளஞ்சிறார்களுக்கு ஏற்ற முறையில் கல்வி கற்பித்து வருகின்றது.

30-9-60. விஜயதசமி நன்னாளில் தொடங்கப் பெற்ற ஆரம்பப் பள்ளியில் இந்நாள் ஆசிரியர் பத்தொன்பதின்மரும் மாணுக்கர் சுமார் எழு நூற்றுவரும் விளங்குகின்றனர். நாங்கள் நேரிற் கண்டு அகம் மிக மகிழ்ந்தோம். தலைமையாசிரியர் பொறுப்புணர்ச்சியும், நேர் மையும், நம்புகைக்கு முழுத் தகுதியும் உடை யவராயிருக்கின்றார். ஆசிரியர் பிறர் அனைவ ராலும் விரும்பப் பெற்றவர். பிள்ளைகளை நடாத்தும் திறத்தில் வல்லவர்.

வாழ்க சேவாஸ்ரமம். வளர்க அதன் பள்ளி கள்.

வாழ்க நிருவாகக் குழுவினர். வளர்க மாண வர்களும் ஆசிரியர்களும்.

உ

முருகன் துணை.

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடிவாழ்க.

ஸ்ரீமத் ஞான ராஜதானியான பொம்மைய பாளையம் திருக்கயிலாய பரம்பரைப்

பெரிய மடம் சிவகஞ்சி மயூராசல நிவாச

யதீச்சுர கர்த்தரான

மயிலம் தேவஸ்தான ஆதீன பரம்பரைத் தர்மகர்த்தத்துவம்

பத்தொன்பதாம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மஹா சந்நிதானம் அருளிய

ஆசி மொழி

உலகம் எல்லாம் உய்யவேண்டும் என்பதே இறைவன் திருவருளை என்றும் சிந்திப்போர் வேண்டும் வழிபாடு. யான்--எனது என்னும் அகப்புறப் பற்றுக்களைக் கழற்றிய துறவிகள் உலகம் வாழத் தங்கள் வாழ்வை அளித்து விட்டவர்கள் என்றே சொல்லலாம். சித்த சுத்தியும் பத்தியும் உடைய துறவிகள் பெருஞ் செல்வம் உடையோர் செய்யக்கூடிய பொது நலத் தொண்டுகளையும் செய்ய இயலும் என்பதற்கு இச் சேவாஸ்ரமம் ஓர் எடுத்துக் காட்டு.

"ஈசனுக்கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்; எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்" என்று சிவஞான சித்தியார் கூறுகிறது. "அன்பிற் சிறந்த தவம் இல்லை" என்றார் பாரதியார். தவத்திற் சிறந்த துறவிகள் அன்பிற் சிறந்து விளங்கி உயிர்களிடத்து அன்பு செய்தல் இவ்வாறு; இதுவே ஈசன் பணி; இதுவே வாழும் முறைமை என்று எடுத்துக் காட்டும் வகையில் இச் சேவாஸ்ரமத்தை இயக்கி வருகிறார்கள்.

பாண்டிய வேந்தன் பரிகள் வாங்கத் தந்த பொருளை யெல்லாம் திருக் கோயிற் பணியிலும் அடியார் பணியிலும் ஈடுபடுத்தி, அவ் வேந்தர் பெருமானையும் திருவருட்காட்சியைக் காணுமாறு செய்த வாதவூரடிகளைப் போன்றே அருள்பழுத்த உள்ளத்தினராய துறவிகள் பலர் ஒன்றுகூடிப் பொருள் பழுத்தோரிடம் உள்ள பொருள் எல்லாம் அனாதை இல்லமும், கல்விக்கூடமும், மருத்துவ நிலையமும், தவயோகப் பயிற்சிக்கூடமும் ஆகுமாறு செய்து, செல்வர்களையும் இறைவனது திருவருட் செல்வர்களாக ஆக்கி வருகிறார்கள்.

இத்தவஞான சீலர்களது தொண்டும், இதற்குதவும் பெரியோர்களும் சிறந்து விளங்கி உயிர்க்குலங்கள் உய்திபெற முருகப் பெருமான் திருவருளும் ஆதி ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் திருவருளும் நிறைவதாக.

மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருப்பேரூராதீனம்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

ஆதீனகர்த்தர்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்

தெய்வ மணங்கமழும் பாரதநாட்டில் அருள் ஞானச்செம்மல் தங்கித் தவமியற்றி நல்வழி காட்டும் நிலையங்கள் திருமடங்கள். செம்மனச் சான்றோர்கள், "தாங்கு பற்றற்ற சகலத்தியாகத்தின்" உயர்ந்த அறவோர்கள். "பெற்ற அறிவால் பெறும் பயன் ஓதும் வீடே" என்றுணர்ந்தவர்கள். அந்நெறியில் மக்கள் வாழ் வாங்கு வாழ வழி காட்டித் திகழ்வதற்கே, காட்டகம் செல்லாது திருமடங்களைத் தோற்றுவித்தனர். அறியாமை நீக்கி அன்பும் அருளும் உடைய வாழ்க்கையினை மக்கள் மேற்கொள்ளஅருளுரை கூறினர். வழி வழியடியார்கள் வளரத் திருத்தொண்டின் நெறி வாழ விளங்கினர். உயிர்க்கெல்லாம் பெரிதும் நன்மை செய்விப்பதில் ஈடுபாடு கொண்டனர். இளைஞர்களைக் குருகுல வாழ்க்கையில் ஈடுபடச் செய்தனர். மெய்ப்பொருள் காணும் அறிவினையும், கசடறக்கற்று அதன் வழி நிலையான உள்ளத்துடன் வாழும் வாழ்வினையும் பெறத் துணைபுரிந்தனர். இத்தகைய மேன்மையைப் புதுப்பிக்கும் முறையில் இன்று எங்களுக்கு உறுதுணையாய்ப் பணிபுரியும் திருமடம் ஈசான்யமடம். இத்திருமடத்தின் தலைவர் "நிலை யிற்றிரியா தடங்கிய" கொள்கை தவவடிவினரும், அடக்கமே திருவுருவாக விளங்குபவருமாகிய தவத்திரு இராமநாத சுவாமிகள் ஆவார். இவர்கள் அருளாளர்கள் துணையுடன் அப்பகுதி மக்களின் தொடர்பும் உடைய சேவாசிரமத்தைத் தொடங்கி நடத்துகிறார்கள். மக்கள் தெளிவு பெற நல்விழாப் பொலிவுற நடத்துதல்; பொருளாதார அறிவு மேம்பாடுகளுக்கானவற்றை அருள் வழியே பெறத் துணைபுரிதல்; திக்கற்ற குழந்தைகளைப் பேணல், கல்வி சமய ஒழுக்கங்கள் வழங்கல் ஆதிய பணிகளைச் செய்து, பால் மணம் மாறாப்பருவத்தினராகிய குழவிகள் முதல் வயது வந்த இளைஞர்கள் வரை பலரும் பயன் பெறத் திருத்தொண்டின் உழைப்பால் சிவமணம் கமழச் செய்து வருகின்றார்கள். இவ்வாசிரமப்பணிகள் தமிழ் கூறும் நல்லுலகிற்கும், பாரதத்திற்கும் நன்மை தருவன; அண்ணாமலையான் அடிக் கமலத்தில் நிலவிப் பணியாற்றும் ஞானச்செம்மலார் வாழ்க; ஆசிரம நற்பணி ஓங்குக.

உ

குருவே துணை

சிரவணபுரம், கௌமார மடாலயம்

ஆதீனகர்த்தர்

தவத்திரு சுந்தர சுவாமிகள் அருளிய

வாழ்த்துப் பாடல்கள்.

(1) திருவருணை ஈசானம் சேர்மடத்தை யொட்டி
உரும்அன்புச் சாதுக்கள் உற்று - வரும் ஏழ்மைப்
பிள்ளைகட்குக் கல்வி பிறங்கும்உண வாதிநல்கும்
வள்ளல்மிகர் சேவாஸ்ர மம்.

(2) சேவாஸ்ர மத்தினிடைச் சேரும் சிறுவர்கட்குச்
சேவையுளம் சன்மார்க்கச் செம்மைமுதல் - யாவையும் நன்
குண்டாக்கும் வண்ணம் உயர்துவக்கப் பள்ளி ஒன்றும்
கண்டுபணி செய்கின்றார் கள்.

(3) பிஞ்சுள்ளம் கொண்டு பிறங்கும் குழந்தைகட்கு
சஞ்சலம்தீர் கல்விஅன்பு தான்வளர - மிஞ்சுபுகழ்
பாலவித் யாலயப்பேர்ப் பண்புநெறிப் பள்ளியொன்று
சாலநன்மை எய்தும் தகைத்து.

(4) ஞானத் தபோதனர்கள் நாடுந் திருவருணை
தானத் துயர்ந்தஈ சானத்துத் - தானத்தார்
சேவா சிரமம் செய்யும்உயர் சேவைஎலாம்
மூவாச்சா துக்கள் முயற்சி.

(5) எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் துறவிகளால்
செவ்வியதாய்க் கொண்டு திகழ்கின்ற - தெய்விகமார்
கொள்கைச்சே வாசிரமம் கோதில் இறைஅருளால்
விள்ளும்உயர் வெய்துகமேன் மேல்.

உ

குருபாதம்

சென்னை, தருமை ஆதீன சமயப் பிரசார நிலேயம்,
தவத்திரு, சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

வாழ்த்துரை

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது ஆன்ருேர் அமுதவாக்கு. ஏழைக் குழந்தைகளுக்கு உணவும், உடையும், உறையுளும் உதவி உடலே வளர்ப்பதும், பள்ளி அமைத்து அவர்கட்குக் கல்வி புகட்டி அறிவை வளர்ப்பதும், பக்திப் பாடல்களை ஓதுவித்துப் பண்பை வளர்ப்பதும், நீதி நூல்களைக் கற்பித்து ஒழுக்கத்தை வளர்ப்பதும் சேவாஸ்ரமத்தின் சேவையாகத் திகழ்கிறது. இச் சேவை சமூகத்திற்குச் செய்யும் சேவை; சமுதாயத்திற்குச் செய்யும் சேவை; தேசத்திற்குச் செய்யும் சேவை; தெய்வ நெறிக்குச் செய்யும் சிறந்த தொண்டு.

இவ் அரிய திருத் தொண்டினை ஒன்பது ஆண்டுகளாகச் சிறந்த முறையில் நடத்திவரும் தவச் செல்வர், திருவண்ணுமலே, ஈசான்ய மடத்தின் அதிபர், ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஸ்வாமிகள் ஆவார்கள். இவர்கள் பெயர் விரும்பாப் பெருந்தகையாளர். பேசாமல் பெரும் பணியாற்றும் பேரருளாளர்.

இவர்கள் கருணையால், பல துறவியர்களும், தவச் செல்வர்களும் ஒருங்கிணைந்து உழைப்பால் உயர்த்திவரும் இச் சேவாஸ்ரமம் நாட்டிற்கு நல்ல பணியைச் செய்து வருகிறது. இக்காலத்திற்கு ஏற்ற பணியைச் செய்து வருகிறது. வளர்க சேவாஸ்ரமம்! வாழ்க அடிகளின் திருவுள்ளம்.

உ

முருகா

சிவத் திரு 'அருண்மொழி அரசு'
கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள் அவர்கள்

வாழ்த்துரை

(நேரிசை வெண்பா)

வாழிதிரு வண்ணு மலேயுறைசே வாச்ரமம்;
வாழிசீர் ராமநா தப்புனிதன்—வாழியே
கல்விபெறு மாணவர்கள்; கந்தன் கருணையினுல்
செல்வநலம் ஓங்கிச் சிறந்து.

சி. என். அண்ணாதுரை
முதலமைச்சர்

கோட்டை
சென்னை-9

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே." உண்டியோடு உற்ற கல்வியும் அளிப்பது ஒருவருக்கு வாழ்வையே அளிப்பதாகும். இந்த அறப்பணியில் திருவண்ணாமலை "சேவாஸ்ரமம்" ஆர்வத்துடனும், தொண்டுள்ளத்துடனும் ஈடுபட்டு வருவதை அறிந்து அகமகிழ்ச்சி கொள்கிறேன்.

இங்கே பயிலும் மாணவர்கள் கல்வியில் தேர்ந்து சிறப்படைவதுடன், சமுதாயத்திற்குத் தாங்களும் பயனுள்ள குடிமக்களாகத் திகழ வேண்டும் என்ற உன்னதக் குறிக்கோளைத் தங்கள் உள்ளத்தில் பதிய வைத்தவர்களாக வளர வாழ்த்துகிறேன். சேவாஸ்ரம நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது அன்பு கெழுமிய பாராட்டுக்கள்.

அண்ணாதுரை

இரா. நெடுஞ்செழியன்
கல்வி-தொழில் அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9

பண்புடைய துறவியர் பலர் மேற்பார்வையில் திருவண்ணாமலையில் சேவாஸ்ரமம் நடத்தப்பட்டு வருவதையும் அதன் கல்விப் பணியையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். நமது நாட்டில் அருள் உணர்ச்சிக்கும் பணிவுணர்ச்சிக்கும் குறைவில்லை. இந்த சிலங்களை, ஆதரவற்ற மக்களின் நன்மைக்காக வகையாகப் பயன்படுத்தக் கூடிய கருவி இல்லாமல் இருந்ததுதான் ஒரு குறை. சேவாஸ்ரமம் போன்ற நிறுவனங்கள் இக்குறையைப் போக்குகின்றன. சமுதாயம் பயன்பெறும் வகையில் இந்த நிறுவனத்தின் கல்வி அறப்பணிகள் மேலும் மேலும் வளர்வதாக.

"சேவாஸ்ரமம் சிறப்பு மலர்" முயற்சிக்கு என் நல் வாழ்த்துக்கள்.

இரா. நெடுஞ்செழியன்

எம். பக்தவத்சலம்
முன்னாள் முதலமைச்சர் சென்னை.

சேவாஸ்ரமம் சிறப்பு மலர் ஒன்று வெளியிட யிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மலர் சிறந்த முறையில் வெளிவர எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எம். பக்தவத்சலம்

N. S. SAKKARAI MANDRADIAR
(PATTAGAR OF PALAYAKOTTAI)
Ex-Minister For co-operation சென்னை.

பக்தி நெறி பரப்பும் அருட் செம்மல்கள் திருவண்ணாமலையில் சேவாஸ்ரமம் கண்டு, தூய அருட்பணி ஆற்றி வருவதை அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன். மனக் கவலையை நீக்கி தெளிவை அளிப்பது பக்தி. ஏழை எளிய மக்களின் துன்பங்களைத் துடைத்து, நல் வாழ்வுக்கு வழி காட்டும் சான்றோர்கள் சேவாஸ்ரமத்தின் மூலம் பக்தியையும், சேவை உணர்வினையும் வளர்த்து வருகிறார் கள். சேவாஸ்ரமத்தின் தொண்டுகள் பெரும் பயன் தர என் நல் வாழ்த்துக்கள்.

N. S. SAKKARAI MANDRADIAR

திரு. ஆ. இராதாகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்.,
ஆணையாளர்,
அற நிலைய ஆட்சித்துறை

சென்னை-34

வாழ்த்துச் செய்தி

மனித வாழ்வின் சிறப்பும் பெருமையும், பிறருக்குச் சேவை செய்வதன் மூலமாகவே உண்டாகின்றன. சேவை செய்வதன் சிறப்பினையே, திருநாவுக்கரசர், "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் தேவாரத் திருமொழியால் புலப்படுத்தி அருளினர்.

இத்தகைய சிறந்த சேவையினைச் சிறப்புறச் செய்தல் வேண்டும் என்னும் பெருங் குறிக்கோளுடன், 'எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி இரங்கும்' இனிய பண்புடைய, தூய நல்ல துறவியர் பலர் ஒன்று சேர்ந்து, திருவண்ணாமலையில் "சேவாசிரமம்" என்னும் சிறந்த பணி நிலையத்தினைத் தகுந்ததோர் இடத்தில் அமைத்துத் தொண்டுகள் ஆற்றி வருவது, மிகவும் பாராட்டி மகிழ்தற்கு உரியது.

சிறுவர் இல்லம், பாலவித்தியாலயம், உயர் துவக்கப்பள்ளி முதலியன, இந்தச் சேவாசிரமத்தின் சார்பில் நடத்தப்பெற்று வருகின்றன. ஏழைச் சிறுவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, உறைவிடம், பெட்டி, படுக்கை, புத்தகம் முதலியன எல்லாம் அளிக்கப் படுகின்றன.

'சேவாசிரமம் பால வித்தியாலயம்' 2½ வயது முதல் 4 வயது வரை உள்ள இளங் குழந்தைகளுக்கு இன்ப விளையாட்டு முறை யிலேயே எண்ணும் எழுத்தும் நற்பண்புகளும் பயிற்றி நலமுற வளர்த்து வருகின்றது.

உயர் துவக்கப்பள்ளி 600-க்கு மேற்பட்ட மாணவ மாணவியர் களுடனும், 19 ஆசிரியர்களுடனும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

திருப்பராய்த்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்தின் தலைவர், தவத்திரு சித்பவானந்த சுவாமிகள் அவர்கள் தலைமையில், 'அந்தர் யோகம்' என்னும் அகமுக வழிபாடும் ஆண்டுக்கு இரண்டு நாட்கள் நடந்து வருதல் அறிந்து மகிழத்தக்கது.

பெருமக்கள் பலரும் பாராட்டும்படி சிறந்த முறையில் தொண் டாற்றிவரும் திருவண்ணாமலைச் சேவாசிரமம், மேன்மேலும் செழித்து ஓங்கி வளரும்படி, எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வணங்கி, என்னுடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆ. இராதாகிருஷ்ணன்

வாழ்த்துச் செய்தி

திரு. மா. சே, சாரங்கபாணி முதலியார் அவர்கள், பி. ஏ., பி எல்.,

முன்னாள் ஆணையர்

அறநிலைய ஆட்சித் துறை.

தமிழ் நாட்டின் தலங்களுள், தலை சிறந்த தொன்றாகத் திகழ்வது திருவண்ணாமலை. அருணகிரிநாதர், குருநமசிவாயார், குகை நமசிவாயர், ரமண முனிவர், சேஷாத்திரி சுவாமிகள் முதலிய பல பெரும் சான்றோர்கள், வாழ்ந்து அருள் பெற்ற புனிதத் தலம் திரு வண்ணாமலை. 'ஆடிப்பாடி அண்ணாமலை கை தொழ ஓடிப்போம் நமது உள்ள வினைகளே' என்று திருநாவுக்கரசர் திருவண்ணாமலையைப் போற்றியுள்ளார். "ஞானத் தபோதனரை வாஎன்று அழைக்கும் மலை அண்ணாமலை" என்ற, சிறப்பைப் பெற்றுத் திகழ்வது திரு வண்ணாமலை.

திருவண்ணாமலையில் ஞானத்தபோதனர்கள் ஆகிய நல்ல பல சான்றோர்கள், தமிழகத் தின் பல பகுதிகளிலும் இருந்து ஒன்று சேர்ந்து, "**சேவாஸ்ரமம்**" என்னும் சிறந்த தொண்டு நிலையம் ஒன்றை, இங்கு அண்மைக் காலத்தில் (1958) அமைத்தருளி உள்ளனர். தமிழக அரசும், நடு அரசின் சமூக நலக் குழுக் களும், இந்த சேவாஸ்ரமத்தினை இசைந்து ஏற்று, ஒப்புதல் அளித்துள்ளன. எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி இரங்கும் இனிய பண்புடைய சிறந்த பெருமக்கள் ஆகிய துறவி யர் பலரை உறுப்பினராகக் கொண்டு, அவர் களின் நேர்முக ஆட்சியில், இந்தச் சேவாஸ் ரமம் இயங்கி வருகின்றது.

இதன் சார்பில், **பாலர் வித்தியாலயம், சிறுவர் இல்லம், உயர் துவக்கப் பள்ளி,** முதலியன சிறந்த முறையில் நடத்தப் பெற்று வருகின் றன. ஏழைச் சிறுவர்களுக்கு இலவசமாக, உண்டி உடை உறையுள் முதலிய எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன. இளங் குழந்தைகள், இனிய விளையாட்டு முறையி லேயே எண்ணும் எழுத்தும், நற்பழக்க வழக் கப் பண்பாடுகளும், நல்ல முறையில் பயிற்று விக்கப் பெறுகின்றனர்.

மக்களின் அறிவு வளர்ச்சிக்கான **நூல் நிலையமும்,** அமைத்து நடத்தப் பெற்று வரு கின்றது. ஞான நெறி வாழ்வை விரும்பி நாடி வரும் நல்லோர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து, அவர்களுக்குத் தகுந்த அருளியல் ஞானநெறிப் பயிற்சிகளையும், இஃது அளித்து வருகின்றது.

திருவண்ணாமலை ஈசான்ய மடம், **தவத்திரு, இராமநாதசுவாமிகள்** அவர்களைச் செயலாள ராகக் கொண்டு, உயரிய நோக்கங்களும் சிறந்த குறிக்கோள்களும் உடையதாகப் பெருந் தொண்டாற்றி வரும் இந்த **சேவாஸ் ரமம்,** மேன்மேலும் செழித்தோங்கி வளரு மாறு, அண்ணாமலை அண்ணலின் அருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. A. சிதம்பரம் அவர்கள் B.A., B.L.,

துணை ஆணையாளர்,

அறநிலைய நிர்வாகத்துறை,

சென்னை-34.

திருவண்ணாமலை சேவாஸ்ரமம் நடத்திவரும் உயர் துவக்கப் பள்ளியையும் சிறுவர் இல்லத்தையும் பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. தன் நலம் இல்லா தனிப்பெரும் சேவையே நோக்கமாகக் கொண்டு 1958-ல் நிறுவப்பட்டு இதுகாறும் தொண்டாற்றி வரும் இந்த ஸ்தாபனங்கள் நமது சமுதாயத்தை உருவாக்குவதில் சிறந்த பங்கு கொண்டிருக்கின்றன. மாணவர்களிடை இங்கு பரவி நிலவி வரும் ஒழுங்கு, கட்டுப்பாடு, சேவை உணர்வு பக்தி, தெளிவு, ஞானம் எல்லாம் நம் மனதைக் கவர்வதோடு இம்மாணவர்கள் பாரத தேசத்தின் முற்போக்கில் வீரர்களாய் திகழ்வார்கள் என்று எடுத்துக் காட்டுகின்றன. ஸ்ரீமத் திருச்சி சுவாமிகள், ஸ்ரீமத் இராமநாத ஸ்வாமிகள் அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் இம்மாதிரி செய்து வரும் தொண்டை பாராட்டுவதோடு அவர்கள் தொண்டு என்றென்றும் வாழ அண்ணாமலையார் திருவடியில் பிரார்த்திக்கிறேன்.

உ
சிவமயம்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

'தமிழ்க்கடல்', 'சிவமணி', 'சிவம்பெருக்கும்சீலர்'

ராய. சொ.

—:o:—

இது அப்பர் சுவாமிகள் திருவாய் மலர்ந்து அருளியது. என்னுடைய கடமை தொண்டு புரிந்து கொண்டிருப்பதே என்பது இதன் பொருள். 'தன்கடன் அடியேனையும் தாங்குதல்.' உலகு அனைத்தையும் தாங்குகின்ற அவனுடைய கடன் என்னையும் ஏற்றுக் கொள்ளுதல்.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன் ;
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான் ;
தன்க டன்அடி யேனையும் தாங்குதல் ;
என்க டன்பணி செய்து கிடப்பதே.

நம்முடைய முருகக்கடவுளை ஈன்ற உமையவட்கு உடம்பில் ஒரு கூறு அளித்தவனாகிய, தெற்கே இருக்கின்ற திருக்கடம்பூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற அழகிய 'கரக்கோயில்' உடையானாகிய சிவபெருமானின் கடமை என்னையும் ஏற்றுக்கொள்ளுதல். என்கடமை அவனுக்கும், மக்களுக்கும் இடையறாது ஏவல் செய்வதே! என்பது இப்பாட்டின் பொருள். இத்தலம் சிதம்பரத்தினின்றும் 18 கல் தொலைவில் உள்ளது. 'கரக்கோயில்' என்பது கோயிலின் பெயர். இத்தலத்தை,

'கடம்பூர் மேவிய விடங்கா போற்றி !'

என்று திருவாசகமும் போற்றும்.

'நம்கடம்பனை' என்ற இத்தேவாரம் அம்மையப்பனின் வடிவத்தைச் சித்தரிக்கின்றது. சிவபெருமானின் தி மேனியைத் தணித்து அருள் சுரக்கும் பசுமையுடைய அம்பிகை இங்கு பாராட்டப்பெறுகின்றார்.

'தழல் உருவில் ஒருபாதி குளிரஒரு
புறம்நின்ற தையல் நாயகி'

என்பார் குமரகுருபர அடிகள். அம்பிகையோடுகூட, கடம்பனும் இங்கு பேசப் பெறுவதால், கந்தனும் உமையும் கடவுளும் கூடிய சோமாஸ்கந்த வடிவம் நம் கண்முன் நிற்கின்றது.

இவ்வடிவத்தை,

தார்ஆட்டு மதிமுடித் தீராத
வினைதீர்த்த தம்பிரானும், தம்பிரான்
தழல்உருவில் ஒருபாதி குளிரஒரு
புறம்நின்ற தையல்நா யகியும்வைத்துச்
சீராட்டி விளையாடு சேனா-
- பதிக் கடவுள் !'

என்று குமரகுருபர அடிகள் வாய்குளிரப் பாடுவார். இத்தகைய, 'தையலோடும் சரவணத்துத் தனயனோடும்' கூடியவடிவம், பணிசெய்யும் பொருட்டுத் தன்னையும் தாங்க வேண்டும் என்பது அப்பர்பெருமான் உள்ளக் கிடக்கை.

பணிசெய்யத் தம்மை ஆளாக்கிவிட்ட கடவுளின் திருவுருவத்தைக்காண மானுடப்பிறவி வேண்டும் என்பார் அப்பர் அடிகள்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ-
-தே இந்த மாநிலத்தே.

கூத்தாடும் கோலத்தைக் காணக்கூடுமானால் மனித வடிவமும் வேண்டும் என்பதால், பிறப்பு அறுத்து விடு அடையும் நிலையைவிட, பிறந்து இறைவனைக் காண்டலே சிறப்பு என்ற கருத்தை அந்த 'உம்' எடுத்துக்காட்டுகின்றது. இதே கருத்துப்பட, திருவிளையாடல் ஆசிரியர், பரஞ்சோதிமுனிவர் ஒரு அழகிய பாடல் பாடினார். அப்பாடல் பின் வருகின்றது.

பாயுடையார் விடுத்தபழி அழல்வழுதி
உடல் குளிப்பப் பதிகம் ஓதும்
சேய்உடை,ஆ ரணம் திளைக்கும் செவியுடையார்,
அளவிறந்த திசைகள் எட்டும்
தோயுடையார், பொன்இதழித் தொடையுடையார்,
விடஅரவம் சுற்றும் ஆல
வாய்உடையார், புகழ்பாடப் பெறுவேமேல்
வேண்டுவதுஇம் மனித யாக்கை.

, 6

விளக்கம் :

பாயுடையார் : பாயை உடையாக உடுத்திய அமணர்கள்.

விடுத்தபழி : அவர்கள் ஏவிய பழியாகிய நோய்.

அடல்வழுதி : வலிமைமிக்க பாண்டியன்.

பதிகம் : 'மந்திரமாவது நீறு' என்ற தேவாரப் பதிகம்.

சேய் : திருஞானசம்பந்தப் பெருமான்.

சேய் உடை ஆரணம் : தேவாரமாகிய வேதம்.

திளைக்கும் செவி : அனுபவிக்கும் (சிவபெருமானின்) காது.

திசைகளெட்டும் தோயுடையார் : திக்குகளை ஆடையாக உடைய சிவபெருமானாகிய திகம்பரர்.

பொன்இதழித்தொடை : தங்கநிறமான சரக் கொன்றைமாலை.

ஆலவாயுடையார் : மதுரையில் எழுந்தருளியுள்ள சொக்கேசர்.

அப்பெருமானின் இசைபாடும் பேறு கிடைக்குமானல் மனிதப்பிறவி வேண்டுவதே. இப்பாடல் மேலேசொன்ன அப்பர் தேவாரத்தொடு பெரிதும் ஒத்தது. மேலும் அடியாராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் தேவாரத்தைக் கேட்டுச் சிவபெருமான் காது சிறப்படைந்தது என்று கருதுமாறு பாடல் அமைந்திருப்பதால் ஆண்டவன் பெருமையைவிட, ஆண்டவனுக்கும் அவன் மக்களுக்கும் தொண்டு செய்யும் அடியார் சிறப்பு மேம்படுகின்றது.

சேக்கிழார் அடிகள் மனித்தப்பிறவி வேண்டும் என்று மகிழ்ந்து கூறுவர். ஆனல் மேலே கூறிய திருநாவுக்கரசருக்கும் பரஞ்சோதி முனிவருக்கும் சிறிது மாறுபடக் கூறுவர் சேக்கிழார். அவ்விருவரும் கடவுளைக்காண மனித்தப் பிறவியை வேண்டுகின்றனர். சேக்கிழார் அடிகள், அடியாரை வணங்க மானுடப் பிறவி வேண்டுகின்ருர் ; வேண்டுவது மட்டுமல்ல ; அடியாரை வணங்கத் தாம் எடுத்த பிறவிக்கு ஒரு வணக்கமும் செலுத்துகின்ருர்.

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை,
எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்,
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்.

'அன்பு உள்ளத்தோடு அழகிய நீலகண்டனுகிய சிவபெருமானின் அடியார்கள் சிறப்பினை உயிரனைத்தும் தொழுமாறு தொகுத்து, நாடு கடைத்தேற, 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகையை முன்னே அருளிச் செய்த திருவாளனுகிய சுந்தர மூர்த்திகளின் மணமுள்ள மலர்போன்ற மெல்லிய திருவடியை வணங்குதற்கு வாய்த்த பிறப்புக்கு ஒரு கும்பிடு' என்பது பாட்டின் பொருள்.

கடவுளைத் தொழவேண்டும் ; அவன் அடியாரை இறைஞ்சுதல் வேண்டும் ; கடவுளுக்கும் அடியார்க்கும் பணிசெய்யத் தோன்றிய பிறப்புக்கும் வணக்கம் செலுத்த வேண்டும் என்பது பெரியோர் குறிக்கோள். இது கொண்டே,

" அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே. "

என்ருர் தாயுமானப் பெரியார்.

இக்கட்டுரை சேவாச்சிரம மலர்குறித்து எழுந்ததாதலின் சேவையின் சிறப்பு இங்குச் சிறிது செப்பப் பெற்றது.

தொண்டு நெறி

கி. வா. ஜகந்நாதன்

★

மனிதன் குழந்தையாக இருக்கும்போது எல்லாவற்றுக்கும் பிறருடைய உதவியை எதிர் பார்க்கிறான். குழந்தையைத் தாய் எடுத்து உணவூட்டித் தாலாட்டிச் சீராட்டுகிறாள். நீராட்டுதல், உடை அணிதல் முதலியவற்றை அவளே செய்து தருகிறாள். நாளடைவில் தனக்கு வேண்டிய காரியங்களைத் தானே செய்துகொள்ளும் ஆற்றலை அவன் பெறுகிறான். உலகத்தில் தோன்றியபோது பிறர் உதவியை எதிர்பார்க்கும் நிலையில் இருந்த மனிதன் பிராயம் ஆக ஆகத் தன்னுடைய ஆற்றலால் நிமிர்ந்து நின்று தன்னுடைய கை முதலிய அவயவங்களைச் சரியானபடி இயக்கப் பழகுகிறான்; தன் காலால் நிற்கப் பழகுகிறான். எத்தனைக்கு அவன் பிறருடைய உதவிகளைக் குறைத்துக்கொள்கிறானோ அத்தனைக்கு அவன் ஆற்றல் உடையவன் ஆகிறான். பேராற்றல் படைத்தவன் தனக்குரிய காரியங்களைத் தானே செய்துகொள்வதோடு பிறருக்கும் நலம் செய்கிறான்.

மனிதன் வாழ்வில் பிறரால் உதவி பெறுவது என்பது எப்போதும் உண்டு. எல்லாக் காரியங்களுக்கும் பிறர் உதவியை நம்பா விட்டாலும் பல காரியங்களில் பிறருடைய உதவி இல்லாமல் தனி மனிதன் வாழமுடியாது. தன்னுடைய சரீர சம்பந்தமான காரியங்களுக்குப் பிறருடைய உதவியை நாடாது இருக்கிறவனும் குடும்பம் நடத்துகிறபோது பிறருடைய உதவியை எதிர் பார்ப்பவன் ஆகிறான். ஒரு மனிதன் தனிக் கட்டையாக வாழ்வது என்பது இயலாத காரியம். அப்படி வாழ்வதால் சமுதாயம் வளர்வது இல்லை. திருமணம் செய்து கொண்டு மனைவியுடனும், குழந்தைகளுடனும் வாழும் குடும்பமே நாட்டின் உறுப்பாக இருக்கிறது. குடும்பங்கள் நிலையாக வாழ வேண்டுமானால் ஒருவருக்கொருவர் உதவி செய்ய முந்தவேண்டும்.

தனியாக வாழ்கிற மனிதன் தன்னுடைய காரியங்களைத் தானே செய்துகொள்வதில் ஓர் இன்பம் பெறுகிறான்; என்றாலும் அதைவிட இன்பம் பிறருக்கு உதவி செய்வதில்தான் இருக்கிறது. ஒருவனுக்கு உதவி செய்வதனால் ஊதியம் பெறுவது ஒருவகை. கூலிக்கு வேலை செய்வது இது. தன்னால் ஆகக்கூடிய ஒரு காரியத்தை பிறருக்குச் செய்து, தன்னிடத்தில் இல்லாத ஒன்றை அவனிடம் இருந்து பெற்றுக்கொள்கிறவனும் இருக்கிறான். இது பண்டமாற்றுதல் போன்றது. பணமாகப் பெற்றாலும், வேறு உதவியாகப் பெற்றாலும் அவை ஒருவகை வியாபாரமேயாகும். அதனால் உள்ளத்தில் உவகை உண்டாவதில்லை. தன்னுடைய ஆற்றலின் மிகுதியினாலே எதனையும் எதிர்பாராமல் பிறருக்கு உதவி செய்வது என்பது பெரிய மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கும்.

மிக்க பொருள் உடையவன் தன்னுடைய கைப்பொருளை ஏழைகளுக்குக் கொடுத்து உதவுவதில் இன்பம் இருக்கிறது என்று வள்ளுவர் சொல்வார்.

" ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் "

என்பது குறள்.

தன் கைப்பொருளைத் தனக்கே பயன்படுத்திக் கொண்டு, மேலும் மேலும் சேர்த்துக் கொண்டிருப்பவனை உலகம் பாராட்டுவதில்லை. தனக்குக் கிடைத்த பொருளால் பிறருக்கு உதவி செய்யவேண்டுமென்ற விரிந்த மனோபாவம் உடையவனை உலகம் போற்றுகிறது. கையில் உள்ள பொருளைப் பிறருக்குக் கொடுப்பது போன்றது தன் உடம்பின் ஆற்றலையும், மனத்தில் உள்ள அறிவையும் பிறருக்குத் தருவது. பொருளைக் கொடுப்பதனாலே அந்தப் பொருள் குறைந்துவிடும். ஆனால் ஆற்றலினால் ஒருவருக்கு உதவி செய்வதனாலும், அறிவினால் பிறருக்கு ஒன்றைக் கற்பிப்பதாலும் ஆற்றலும், அறிவும் குறைந்து போவதில்லை.

பொருள் கொடுப்பவனைக் காட்டிலும், பிறருக்குத் தன் ஆற்றல் காரணமாக உதவி செய்பவனும், கல்வி காரணமாக அறிவை பங்கிட்டுத் தருபவனும் எதையும் இழப்பதில்லை. பொருளுடையவனே தன்கைப்பொருளை இழந்து புகழைப் பெறுகிறான்- மற்றவர்கள் தாம் பெற்ற பொருளை இழவாமலே புகழைப் பெறுகிறார்கள். ஆகவே ஆற்றல் உள்ளவன் உதவுவதும், அறிவு உள்ளவன் பிறருக்கு உதவுவதும் எளிய காரியங்களென்று தோன்றுகிறது.

கல்வியை உடையவன் பிறருக்கு வழங்காமல் சும்மா இருந்தானானால், அடுத்த பிறவியில் பிரம்மராட்சசாகப் பிறப்பான் என்று சொல்வார்கள். தன்னிடத்தில் உள்ள பொருளைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்தாக வேண்டும் என்பதை வற்புறுத்துவதே அது. திருக்குறளில் ஈகை என்று ஓர் அதிகாரம் இருக்கிறது. ஒப்புரவு என்ற அதிகாரமும் இருக்கிறது. ஒரு பொருளால் குறைவு உடையார் அதனைப் பெற்று வாழும் பொருட்டு, தன்னிடத்தில் உள்ள பொருளைக் குறிப்பினால் அறிந்து கொடுப்பது ஈகை. இது செல்வர்கள் ஏழைகளின்பால் செய்யும் செயல். ஒப்புரவு என்பது அத்தகையது அன்று. தன்னிடத்தில் உள்ள பொருளைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்து இன்புறுவதே ஒப்புரவு. அந்தப் பொருளை வாங்கிக் கொள்கிறவர்கள் ஏழைகளாகத்தான் இருக்க வேண்டும் என்பது இல்லை. சமுதாயத்தில் உயர்நிலையில் உள்ளவர்கள் தம்முடைய பொருளை மற்றவர்களுக்குப் பயன்படும்படியாகச் செய்து சமதர்ம நெறியில் வாழ்கிறபோது ஒப்புரவு உடையவர்களாகிறார்கள். இன்று நாம் எதைச்சமதர்மம் என்றும் பொதுவுடமை என்றும் சொல்கிறோமோ அதை அந்தக் காலத்தில் ஒப்புரவு என்று சொல்லி வந்தார்கள். மிகுதியாகப் பொருளைச் சம்பாதிக்கிறவன் அதனைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளாது இருந்தால் அகங்காரத்தில் மிக்கவனாகிறான். ஆகவே ஈட்டுவது மிகுதியாக ஆகப் பலருக்கும் கொடுத்துப் பயன்பெற வேண்டுமென்று பெரியவர்கள் சொல்லி வந்தார்கள்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

என்று வள்ளுவர் சொல்வதும் ஒப்புரவே. ஏழைகளுக்கு மட்டும் ஈந்து வாழ்கின்ற வாழ்வு அது அன்று. தன்னிடத்தில் உள்ள பொருளைப் பிறருக்கும் பயன்படும்படி செய்து வாழ்ந்து வரும் சமதர்ம நெறியை அது சொல்கிறது.

பொருளினால் சமதர்ம நெறியைப் பின்பற்றிப் பிறருக்கும் பங்கிட்டு வாழ்வது எப்படிச் சிறந்ததோ அதுபோலவே தன்னுடைய அறிவையும், ஆற்றலையும் பிறருக்கும் பயன்படும்படி செய்வது ஒருவகைச் சமதர்மமாகும். அதைச் சமதர்மம் என்று சொல்வது இல்லை. தொண்டு நெறி என்று சொல்வார்கள். பொருள் இல்லாதவர்கள் ஆற்றலும் அறிவும் உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த ஆற்றலையும், அறிவையும் எளியவர்களுக்கும் பயன்படுத்தி, அவர்களும் நலம் பெறும்படியாகச் செய்வது சிறந்த பண்பு. தன்னுடைய ஆற்றலை வளர்த்துக்கொண்டு, அறிவையும் வளர்த்துக் கொண்டு அதனால் பலருக்கும் நலம் செய்யத் துணிகின்றவன் தொண்டு நெறியில் நிற்கிறான்.

உலகில் எல்லோருக்கும் ஆற்றலும், அறிவும் நிரம்பக் கிடைப்பது இல்லை. அவை இல்லாதவர்களே பலராக இருக்கிறார்கள். செல்வம் இல்லாதவர்கள் எப்படி மிகுதியாக உலகில் இருக்கிறார்களோ அப்படியே ஆற்றலும், அறிவும் இல்லாதவர்கள் பலராக இருக்கிறார்கள். செல்வத்தைச் செல்வம் இல்லாதவர்களுக்கு ஈவது சிறந்தது. ஆற்றல் இல்லாதவர்களுக்கு தன்னுடைய ஆற்றலினால் விளையும் விளைவைக் கொடுப்பதும், அறிவை ஈவதும் அதனோடு ஒத்தவையே. தம் ஆற்றலையும், அறிவையும் பிறருக்குக் கொடுப்பவர்கள் சிறந்த தொண்டர்கள். இதையே தொண்டு நெறி என்று சொல்வார்கள்.

தன்னிடத்தில் உள்ளவற்றைப் பிறருக்கு ஈயாதவன் தன்னுடைய நலத்தை மறக்காதவன். தன்னலத்தை மறந்தவன் மகாத்மா ஆகிறான். பிறர் நலத்தை எண்ணி அவர்களுடைய வாழ்வுக்காகத் தன்னிடத்தில் உள்ள ஆற்றலையும், அறிவையும் பெருக்கிக் கொள்கிறான். செயற்கரிய காரியங்களைச் செய்கின்ற பெரியவன் ஆகிறான். இத்தகையவர்களால், உலகத்தில் வறுமை முதலிய நிரம்பியிருந்தாலும் அவற்றினால் மக்கள் துன்பம் அடையாமல் வாழும் வகை உண்டாகிறது. நோய் உடையவர்களுக்கு மருந்துடைய

மருத்துவன் சென்று உதவுகிறுன். ஏழை களுக்குச் செல்வம் உள்ளவன் உதவி செய் கிறுன். பலவீனனுக்கு ஆற்றல் உள்ளவன் உதவி செய்ய முன் வருகிறுன். அறியாமையில் உழல்கிறவனுக்கு கல்வியில் சிறந்தவன் உதவ முன் வருகிறுன். மேடாக உள்ள இடத்தில் இருந்து பள்ளத்தை நோக்கி நீர் செல்வது போலே அமைவது இது. எந்த எந்தப்பொருள் யாரிடத்தில் மிகுதியாக இருக்கிறதோ அவற்றை அவை இல்லாத மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதால் வாழ்க்கை சமமாக இருக்கும். உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடு தோற்றுது. பொருள் அளவில் இப்படி நிற் பதைத்தான் ருஷ்யா முதலிய நாடுகள் சொல் கின்றன. ஆனுல் இந்திய நாட்டின் கர்ம யோகம் என்பது தன்பால் உள்ள எல்லா வற்றையும் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கும் நெறி. இதைப் பரோபகாரம் என்றும், பிறருக்கு உரியனவாக்கும் தன்மை என்றும் சொல்வார்கள். தம்நலத்தை இழந்து பிறர் நலத்தைப் போற்றுகின்ற மனப்பாங்குடைய வர்கள் இப்படித்தான் வாழ்ந்தார்கள். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்று புத்த பகவானைச் சொல்வார்கள். தான் விடுகிற ஒவ்வொரு மூச்சும் தன்னுடைய உடம்பில் உயிர்வாழ்வதற்காக அன்று, பிறருக்கு நலம் செய்வதற்குத்தான் என்று வாழ்ந்தார்கள் அத்தகைய பெருமக்கள்.

இப்படிச் செய்யும் தொண்டினுல் செய்பவ னுக்கு மனநிறைவு உண்டாகிறது. மற்றவர் களுக்குள்ள குறைகளைப் போக்குவதனுல் சமுதாயம் நிறைவைப் பெறுகிறது. குடகிலே பெய்த மழை காவேரியாக அங்கிருந்து ஓடி வந்து தஞ்சை மாவட்டத்திற்குப் பயன்படு கிறது. வேறு ஓரிடத்தில் உள்ள பண்டத்தை விலைக்கு வாங்கி வியாபாரி அது இல்லாத இடத்தில் விற்கிறுன். இதனுல் வியாபாரிக்கு ஊதியம் கிடைக்கிறது. ஊதியத்தைக் கருதா மல் அந்தக்காரியத்தை அவன் செய்தானுனுல் அது பரோபகாரமாகும். இப்படியே தன்னி டத்தில் குவிந்து கிடக்கும் ஆற்றலையும், அறிவையும், செல்வத்தையும் அவை இல்லாத வர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பவன் காவேரியைப் போலவும், மேகத்தைப் போலவும் விளங்குகிறுன். இந்தத் தொண்டு நெறி வளர்ந்தால் மனித வாழ்வில் குறை இருப்பவர்களும் அந்தக் குறை தீர்ந்து வாழ்வார்கள்.

மனிதன் குறையுடன் பிறப்பது இயற்கை. எல்லோரும் நிறைவு உடையவர்களாக இருத் தல் முடியாது. ஆனுல் அதனை நல்லவர்கள் முயற்சியால் நீக்கிவிடலாம். நூறு பேர் ஆற்றல் இல்லாதவர்களாக இருந்தாலும் அங்கே ஒருவன் ஆற்றல் உள்ளவனுக இருந்து பிறருக்கு உபகாரம் செய்தால், ஆற்றல் குறை வினுல் உண்டாகும் துன்பம் போய்விடும்.

பழைய புராணங்கள் இந்தக் கருத்தைத் தான் கதைகளாகச் சொல்கின்றன. முப்பத்து முக்கோடி தேவர்கள் தம்முடைய குறைகளை நீக்கிக்கொள்ள முடியாதவர்களாக இருந்தார் கள். அவர்களுடைய வாழ்வுக்குத் தீங்கு நேர்ந்தது. அதனைப் போக்குவதற்காக இறைவன் முன் வந்தான். தன்னிடத்தில் குவிந்திருக்கும் ஆற்றலை அவர்களுக்குப் பயன் படுத்த வந்தான். அதனுல் முப்பத்து முக் கோடி தேவர்களுக்கும் நலம் உண்டாயிற்று. இப்படிப் புராணம் சொல்கிறது. ஆற்றல் மிகுந்த ஒருவன் தன்னுடைய ஆற்றலைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்து அவர்களு டைய குறையை நிரப்பிய கதைதான் இது. தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவன் கடவுள். எனவே, உலகத்தில் தன்னலம் கருதாது, பிறர் நலம் கருதி வாழ்கிறவன் எவனே அவன் கடவுள் தன்மை உடையவன் என்றே கொள்ளவேண்டும். அத்தகைய பெரியவர்கள் உலகத்தில் சிலரேனும் இருப் பதனுல் தான் உலகம் வாழ்கிறது. அதனைப் புறநானூறு சொல்கிறது.

> "உண்டால் அம்ம, இவ் உலகம்-
> தமக்கு என முயலா நோன்தாள்
> பிறர்க்கு என முயலுநர் உண்மையானே."

என்று.

"குருகுலக் கல்வி"

[சா. கணேசன்]

" பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் "

என்பது தமிழ் மறை. மக்கள் மட்டுமின்றி உயிரினங்கள் யாவும், பஞ்சபூதச் சேர்க்கை, படிவளர்ச்சி, பயன் துய்த்தல் போன்ற பொது இயல்பால் சமமே! ஆனால், தத்தம் செய்வினையால் பெருமை, சிறுமை, என்னும் சிறப்பியல்பு ஒவ்வாது என்பதை,

" சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்"

என, அடுத்துக் கூறி அறிவுறுத்துவான் அறந்தரு செல்வன் வள்ளுவப் பேராசான்.

காரணம் என்ன? எல்லா உயிர்க்கும் சிந்திக்கும் ஆற்றல் இன்மைதான். ஆம்; பிற உயிர்கட்கு உணர்வும் உண்டு; அறிவும் உண்டு. ஏன், பகுத்தறிவு கூட ஓரளவுண்டு. ஆனால் சிந்திக்கும் ஆற்றல் மனிதப் பிறவி ஒன்றுக்கே உண்டு. அதை வளர்ப்பதும், அதன் பயனாய் மெய்ம்மை, நன்மை, உண்மைகளை உணர்வதும், உணர்ந்த வழி அந்நெறி கடைப்பிடித்து உயர்ந்து வாழ்வை வளமாக்குவதும் மனிதப் பிறவியின் பெருங்கடனாகும். அக் கடன் ஆற்றுவதற்குச் சிற்றுயிர்க்கு உற்ற துணையாக இருப்பது கல்வி ஒன்றே. கல் (தோண்டுதல்) என்னும் பகுதியடியாகப் பிறந்ததே கல்வி என்னும் சொல். எனவே இருப்பதை வெளிப்படுத்துவதே கல்வி என்பது ஓரளவு பொருந்துவதாகும்.

கல்விக்கு அடிப்படை கேட்டல் ஆகும். கேட்டதை வைத்துக் கொண்டு சிந்திப்பதும், அதன் தன்மையை உணர்வதுமே கல்வி என்னலாம். ஆகவேதான் ஆசான் இல்லாக் கல்வி அரைக் கல்வி என்பர் மூதறிவாளர்.

ஆசான் உரைப்பதை நாம் செவிகளால் கேட்கிறோம். அப்பொழுது அக்கருத்து ஒலி வடிவில் நம்மையடைகிறது. பற்பல ஒலிகளின் சேர்க்கையே சொல்லாய், சொற்றொடராய் நின்று நம்மை ஒரு கருத்தை உணரச் செய்கிறது. ஒலி வடிவை ஒலி எழுத்தென்பர் அகத்தியன் முதலாய தொல்லாசிரியர். எம்மொழிக்கும் முந்தியது ஒலி எழுத்தே; அது காலக் கணிப்பிற்குக் கட்டுப்படாது. வரி வடிவு அல்லது வரி எழுத்து காலக் கணிப்பிற்கு அடங்கியது. எனவேதான்,

"அநாதி ஒலி எழுத்து;
ஆதி வரி எழுத்து"

என, முதலிலக்கணமாம் அகத்தியம் கணிக்கும்.

கேட்டவற்றையும், வேறு பல கருத்துக்களையும், செய்திகளையும், எல்லார்க்கும், எப்பொழுதும் தெரியச் செய்ய வரி எழுத்தே பயன்படும். ஆகவே நம் முன்னோர், ஒலி கட்புலனுமாறு, வரிவடிவத்தை அமைத்தனர். வரலாற்று நெறியில் நின்று, கிடைக்கின்ற சான்றுகளின் துணைகொண்டு, விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்தால் முதன் முதலில் வரி வடிவம் கண்ட மொழி தமிழ் என்ற முடிவுக்கே வரவேண்டும். இது என் கருத்து.

எனவே வரிவடிவத்தைப் பார்த்ததும் அது அது புலப்படுத்தும் ஒலி நம் உள்ளத்தில் படிய வேண்டும். ஒலி ஒன்றே சொல்லின் பொருளைத் தெள்ளிதின் உணர்த்தும். எனவே ஒலிப்பிழை நேரின் மொழிப்பிழை நேரும். வரிவடிவின்றியும் ஒரு மொழி இயங்குதல் கூடும்; ஆனால் ஒலி வடிவின்றி எம்மொழியும் இயங்கமாட்டாது. எனவேதான் வரி என்ற பெயர் கொள்ளாது மொழி என்ற பெயர் பெற்றது, பாஷை.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது அல்லது தெரிந்துகொள்ள வேண்டுவது, மொழியின் உயிர் நாடியாக உள்ளது ஒலி அமைப்பே என்பதுதான்; இல்லையா? அப்படியானால், கல்விப் பயிற்சிக்கு அடிப்படையான எழுத்தை ஒலி வடிவிலும் வரி வடிவிலும் சிறார்க்குக் கற்பிக்கும் போது மிக்க அக்கறை செலுத்தவேண்டுமன்றோ?

அதை முறைப்படி செம்மையாகக் கற்பித்தாலன்றிக் கல்வி சிறக்காது. இதை எல்லாம் மனத்துட் கொண்டுதான், 'வெற்றி வேற்கை'யின் முதலடியாக,

''எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்''

என்றுன் அதிவீரராம பாண்டியன். மேலும், இக்கருத்தை வலியுறுத்த எண்ணியே அடுத்ததாக,

''கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்''

என்றும் கூறிப் போந்தான்.

இவற்றை எல்லாம் நாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால் தொடக்கப் பள்ளியின் பொறுப்பு எத்துணைப் பெரிது என்பதை நன்குணரக் கூடும். ஒவ்வொரு குழந்தையையும் ஒலிப் பிழை நேராமல் உச்சரிக்கப் பயிற்றுதலே இன்றியமையாத அடிப்படைப் பணியாகும். இதை முற்கால ஆசிரியர்கள் நன்குணர்ந்து செயற்படுத்தினர். ஒலி மட்டுமின்றி வரியும் அழகாக அமையப் பயிற்றுவித்தனர். இன்று இத்துறையில் அக்கறை காட்டும் ஆசிரியர்களைக் காண்பது அரிதாகி வருகிறது. எண்ணிக்கை வேட்கை, தரத்தைக் கெடுக்கிறது. இங்கிலாந்து போன்ற மேற்கத்திய நாடுகளில் ஒலிப்பிழை நேராமலிருக்க மிக்க அக்கறை எடுத்துக்கொள்ளுகிறார்கள். மொழிப் பேச்சொலித் தட்டுக்கள் **(Lingua-phone Records)** வாயிலாக ஆசிரியர்க்கும், மாணக்கர்க்கும் உச்சரிப்பை உணர்த்துகிறார்கள். இவற்றை எல்லாம் நாம் பின்பற்ற வேண்டும்.

ஒரு ஒலியை மாணக்கன் பிழையாக உச்சரித்தால் உடனே ஆசிரியர் அதைத் திருத்த முழு முயற்சியும் செய்ய வேண்டும். குறிப்பாக ங-ஞ, ண-ந-ன, ல-ழ-ள, ர-ற, வேறுபாட்டை ஆசிரியர் தாமே பல முறை ஒலித்துக் காட்டித் திருத்த வேண்டும். மாணக்கனுக்கு அதைக் கேட்ட அளவில் ஒலிக்க வராவிட்டால் அந்த ஒலி எப்படிப் பிறக்கிறது; நாக்கு அண்ணத்தையோ அன்றிப் பல்லையோ எங்கு எப்படித் தொடுகிறது; உதடுகளோ அன்றிக் கீழுதடும் மேற்பல்லும் எப்படி அமைய ஒலிக்க வேண்டும் என்று விளக்கி, சொல்லி, காட்டித் திருந்தச் செய்ய வேண்டும். மந்தை மந்தையாக மேய்த்தாலும் மாட்டைத் தனித்தனியாகவே கரக்கவேண்டும்: இல்லையா? அப்படித்தான் வகுப்பில் மொத்தமாகப் பாடம் நடத்தினுலும், தனித் தனியாகச் சோதித்தே திருத்த வேண்டும்.

பொதுவாகப் பார்த்தால் ஒலி பிறப்பது வாயிலிருந்துதான். வாய் தானுக ஒரு குறிப்பிட்ட ஒலியை உண்டாக்குவதில்லை, ஏற்கனவேயோ, அல்லது அப்பொழுதோ செவிகள் கேட்டு மூளையில் பதிவு செய்துள்ள ஒலியையே வாய் திரும்ப ஒலிக்கிறது. இதைக் கற்பிப்போர் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். மாணக்கர் ஒலிப் பிழை புரிந்தால் அதற்கு ஆசிரியரே ஒரு பெருங் காரணம் என்பதை ஆசிரியரும், நிர்வாகிகளும் மறக்கப் படாது.

எனவே பள்ளி நிர்வாகமோ அன்றிப் பெற்றோரோ ஆசிரியரைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அவர்வாயும், கையும் சுத்தமாயிருக்கின்றனவா என்பதைப் பெரும் பொறுப்புணர்ச்சியுடன் நோக்க வேண்டும். அதாவது அவர் உச்சரிப்பும், கை எழுத்தும் செம்மையாக உள்ளனவா என்பதை நன்கு பரிசீலித்து மனநிறைவு பெற்றபின்னரே நியமிக்க வேண்டும். முன்பிருந்த ஏட்டுப் பள்ளி அல்லது திண்ணைப் பள்ளிகளில் இவை பற்றி மிக்க அக்கறை செலுத்தப் பட்டது. அதில் ஒரு பகுதி கூட இன்றைய தொடக்கப் பள்ளிகளில் காண முடியவில்லை. இப்படிச் சொல்ல வருத்தமாகத்தானிருக்கிறது. என்றுலும், உண்மையைக் கூறித்தானே ஆகவேண்டும், செம்மை பெற வேண்டின்?

அடிப்படையில் ஒலியும், எழுத்தும் வழுவின்றி அமைய வேண்டும். அதன் பயனுய்க் கல்வி வளரும்; கல்வி வளர, அறிவு விளக்கம் பெறும்; அறிவு தெளிவுற்றுல், சிந்தை செம்மைப்படும்; சிந்தையின் செம்மை, சொல்லில் வாய்மையையும், செயலில் தூய்மையையும் சேர்க்கும். அப்புறம் கேட்பானேன்? நாமும் வளர்வோம்; நாடும் ஏற்றம் பெறும்.

இந்த எண்ணத்தைச் சிறப்பாகச் செயல் படுத்த, எல்லா வகையிலும் தக்க ஒரு நிறுவனம் திருவண்ணமலையிலுள்ள இந்தச் சேவாச்ரமம், பணிபுரிதலையே அணியாகக் கொண்ட துறவியர் சேர்ந்து நடத்துவது இது. ஞானத்திலும், பரமோனத்திலும்,

அன்னதானத்திலும் சிறந்த திருத்தலம் திருவண்ணமலை. அங்கு 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடன் வாழ்பவர் ஸ்ரீமத் ராமநாத சுவாமிகள். அவர்களின் முயற்சியும் உழைப்புமே சேவாச்ரமமாக இன்று காட்சி தருகிறது.

இவ் வாச்ரமம் புண்ணிய விடுதி (ORPHANAGE), மழலையர் பள்ளி(NURSERY SCHOOL) உயர் தொடக்கப்பள்ளி (HIGHER ELEMENTARY SCHOOL) முதலிய வற்றை நடத்திவருகிறது. இரவும் பகலும் பிரியாது சில ஆண்டுகள் தொடர்ந்து தங்கிப் பல மாணக்கர்கள் பயில்வதால் இது ஒரு குருகுலம் போல்வதாகும். எனவே மேலே கண்ட சில அடிப்படை கருத்துக்களை செயற்படுத்தல் இவ் வாச்ரமத்திற்கு எளிதாகும்.

தொண்டுளம் கொண்டு பணியாற்றும் இவ் வாச்ரமம் எல்லா வகையாலும் உயர்ந்து வளமுடன் வாழ அன்பர்கள் துணையும் ஆண்டவன் அருளும் நிரம்புவதாக !

"தொண்டு ஒன்றே வழி"

பி. ஸ்ரீ.

'ஆண்டவன் தனது பரமண்டலத்தில் இருக்கிறான்; உலகத்திற்கு ஒரு குறையுமில்லை; எல்லாம் சரியாகத்தான் இருக்கும்' - இது ஓர் ஆங்கிலக் கவிஞனின் அருமந்த மகா வாக்கியம். இதைச் சுட்டிக்காட்டி ஓர் அன்பர் என்னை நோக்கி, 'இத்தகைய சிந்தனைச் சுடர்மயமான ஒரு மகா வாக்கியத்தை நீங்கள் தமிழிலக்கியத்திலிருந்து தேர்ந்தெடுத்துக் காட்டுவீர்களா?' என்று கேட்டார். உடனே என் உள்ளத்தில் மின்வெட்டியது போன்ற ஓர் உணர்ச்சி துடித்தெழுந்தது. அந்த மின்னல்-எழுத்துகளில் உதித்தது ஒரு தேவார மகாவாக்கியம்.

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்;
என்கடன் பணிசெய்து கிடப்பதே."

வாக்கும் வாழ்க்கையும்

திருநாவுக்கரசர் என்ற அப்பர்சுவாமிகளின் அருள்வாக்கு இது. இப்பெரியாரின் வாழ்க்கையில் மலர்ச்சிபெற்ற திருவாக்கு. பணிசெய்வதையே தனிப்பெருங்குறிக்கோளாகக் கொண்டிருந்த திருநாவுக்கரசர், மதுரை மாநகரில் சைவ சமயத்தை நிலைநாட்டி ஞான சம்பந்தர் திரும்பிவருவதைக் கேள்வியுற்றதும் அவருக்குப் பணிசெய்யவிரும்பினார். எத்தகைய பணி, தெரியுமா? அவரது முத்துச் சிவிகையைத் தாங்குவாருடன் தாமும் தோள்கொடுத்துத் தாங்கிக் களிப்புற்றார். யாரும் தம்மைத் தெரிந்து கொள்ளாதபடிஅந்தக் கூட்டத்தில் கலந்து அப்பல்லக்கை அப்பர் தாங்கிவரும் போது, 'எங்குற்றார் அப்பர்?' என்று கேட்டார் திருஞானசம்பந்தர், பல்லக்கில் இருந்தபடியே.

அதற்கு அப்பர், 'உம்அடியேன் உம்அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்து எய்தப் பெற்று இங்கு உற்றேன்' என்று கூறினார். அது கேட்ட சம்பந்தர் உளம் மிகப் பதைத்து வெகு விரைவாகப் பல்லக்கிலிருந்து இறங்கி அப்பரை வணங்குகிறார். ஆனால் அப்பர் அதற்கு முன்பே சம்பந்தரை வணங்கி விட்டார் என்கிறது பெரிய புராணம். சம்பந்தர் 'அரசினை (திருநாவுக்கரசரை) வணங்க......... அவர் வணங்காமுன் வணங்'கினார் திருநாவுக்கரசர்என்று கூறி, 'தொண்டரெலாம்தொழுது ஆர்த்தார்' என்று இவ்வரலாற்றுப் பகுதியைப் பாடி முடிக்கிறார் சேக்கிழார் பெருமான்.

அப்பரின் வாழ்க்கைத் தத்துவத்தை, குணாதிசய உயிர்நிலையை இந்தக் கட்டத்தில் காண்கிறோம். அப்பர் வரலாற்றிலே இது ஓர் உயிர்நிலைப் பகுதி எனலாம். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அருமைத் திருவாக்கின் ஒரு பொருள் புதைந்த விரிவுரை இந்த வாழ்க்கைத் துணுக்கு. சம்பந்தரின் வினவுக்கு அப்பர் அளிக்கும் விடை கூர்ந்து நோக்கத்தக்கது.

இப்பணி கிடைத்தது பெரும் பேறு என்கிறார். இப்பணி கிடைக்கப் பெற்றதால் தம் வாழ்வு பெருவாழ்வாக மலர்ச்சி பெற்று விட்டது எனப் பூரித்துப் போகிறார். தொண்டு ஒன்றே பெருவாழ்விற்கு வழி என்பதை உய்த்துணர வைக்கிறார். பாடல்- தொண்டு தான் தொண்டு என்பதில்லை; உள்ளத்தாலும் உடலாலும் தொண்டு நடைபெற வேண்டும்.

"வாழிஅவர் தமைத் தாங்கும்
மணிமுத்தின் சிவிகையினைத்
தாழும்உடல் இது கொண்டு
தாங்குவன் யான்"

என்பதை அப்பரின் ஆசையாகக் காட்டும் சேக்கிழாரின் வாக்கை உற்று நோக்குங்கள்.

'தாழும் உடல் இது கொண்டு' செய்யும் பணி பெருவாழ்வு தருகிறது என்ற அப்பர் கொள்கையைச் சம்பந்தருக்கு இவர் அளித்த

விடையிலிருந்து நாம் தெளிவாக ஊகித்துக் கொள்ளலாம். இத்தகைய பணி செய்வதற்குப் பெரும்பணிவு இன்றியமையாதது. பணிவு இல்லாதது பணியாகாது. இந்தப் பணிவைத் தான் சேக்கிழார் பெருமான், சம்பந்தர் அப்பரை வணங்கினரென்று கூறியதுமே 'அவர் வணங்காமுன்' வணங்கினர் இவரும் என்றும் கூறியுள்ளார். 'என்ன பணி! என்ன பணிவு!' என்று அதிசயித்த தொண்டர் குழாம் இருவரையும் தொழுது 'இத்தகைய பணி வாழ்க; பணிவும் வாழ்க!' என்று முழக்கம் செய்ததாம்.

யார் பணிசெய்யவேண்டும்? யாருக்குச் செய்யவேண்டும்? எப்போது செய்யவேண்டும்? இத்தகைய ஐயப்பாடுகளுக்கெல்லாம் பெரியோரின் இத்தகைய வாழ்க்கைத் துணுக்குகள் விடை தருகின்றன. பணியில் சிறிது, பெரிது என்பது போன்ற பாகுபாடுகள் இல்லை. துறவியும் பணிசெய்வதற்கு உரியவன்தான், ஒரு குடும்பத்தைத் துறப்பது உலகத்தையே ஒரு குடும்பமாகக் கொண்டு பணிசெய்வதற்காகத்தானே.

உடலைக் கொண்டு உழைத்துப் பணிசெய்யும் கடன் துறவிக்கும் உரியதுதான். இந்த உண்மையை உணர்ந்துகொள்வதற்கு வைணவ அடியார்களின் வாழ்க்கைத் துணுக்கு ஒன்றையும் உற்று நோக்கலாம். அதுவும் சிவிகை தாங்குவதை மையமாகக் கொண்டு உழைப்புப் பணியின் சிறப்பை உணர்த்துவதுதான்.

பட்டரும் நஞ்சீயரும்

பட்டர் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் வைணவப்பெரியாரின் சீடர் நஞ்சியர். பட்டர் இல்லற வாழ்க்கை நடத்தியவர். நஞ்சியரோ துறவி. சீடர் குருவுக்குப் பணிவிடை செய்ய விரும்பினர். பல்லக்குப் போகிகளுடன் தாமும் ஒருவராக நின்றார். அப்பர் சுவாமிகள் 'மறைந்த வடிவொடு' சிவிகை தாங்கினர். நஞ்சியர் தம் துறவுக்கோலத்தை மறைத்துக் கொள்ளாமலே தொண்டாற்றினர்.

தம் காவியாடையைக் களையாமலே சிவிகை தாங்கிய நஞ்சியரை நோக்கிப் பட்டர், 'சன்னியாசியாகிய நீர் இப்படிச் செய்யலாமா?' என்று கேட்டுப் பல்லக்கிலிருந்து இறங்க முயன்றார். நஞ்சியரோ, 'கைங்கரியத்திற்குக் காவியாடை இடையூறு என்றால் நான் இப்பொழுதே இந்த உடையைக் களைந்தெறிந்து வெள்ளை அணிந்து கொள்வேன்!' என்று பதில் சொன்னார்.

கச்சி நம்பியின் கதை

திருக்கச்சிநம்பி என்ற பெயரைக் கேள்விப் பட்டிராத வைணவன் இல்லை. இவர் ஒரு வணிகர்குலப் பெரியார்; பார்ப்பனப் பெரியோர்களும் தலைசாய்த்து வணங்கப்பெற்றவர். ராமாநுஜரின் ஆசாரியர்களில் ஒருவராக மதிக்கப் பெற்றவர். இவரும் அப்பர் சுவாமிகளைப் போல் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கொள்கையுடையவர்தாம். காஞ்சிபுரத்து வரதராஜப் பெருமாளுக்குப் பணியாற்றி வந்தார்; அந்தப் பணியிலேயே தம்மை முழுக்க முழுக்க இழந்துவிட்டார். அந்த நிலையில் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி கைங்கரியத்தின் முழு உண்மையையும் இவருக்கு அறிவிக்கலாயிற்று.

வேகவதி யாற்றில் மணற்புறமாக இவர் ஒரு நாள் நடந்து சென்றார். அப்போது 'தீண்டத் தகாதவன்' என்று கருதப்பட்ட வள்ளுவன் ஒருவன் இவரைத் தொடர்ந்து வந்தான். இவர் மிதித்த மணலை அவன் தன் தலைமேல் வைத்துக் கொண்டதை இவர் பார்த்து விட்டார். அவனை அருகே வரவழைத்து முகம் நோக்கி 'அறிவாளியாகிய நீர் இப்படிச் செய்யலாமோ?' என்று கேட்டார். அதற்கு அவன், 'கடையேனும் கடைத்தேற வேண்டாமா? அதற்காகத்தான் பெருமாளுக்குப் பணிபுரியும் பெரியவராகிய தங்கள் அடிப்பொடியைத் தலைமேல் வைத்துக் கொண்டேன்' என்று பதில் சொன்னான். பிறகு அவன் தனக்குக் கதி கிடைக்குமா என்பது குறித்து வரதராஜாவிடம் கேட்டுச் சொல்லும்படி வேண்டிக் கொண்டான். அன்றிரவில் பெருமாள் திருக்கச்சிநம்பியின் கனவில் தோன்றி, 'அடியார் அடிப்பொடி அவன் சென்னி மீதிருக்கக் கதிக்கு ஐயம் ஏன்?' என்று கூறினராம்.

திருக்கச்சிநம்பி இந்தச்செய்தியை அந்த வள்ளுவனுக்கு மறுநாள் அறிவித்தார். உடனே அவன் திருக்கச்சிநம்பிக்கு எப்போது கதி கிடைக்கும் என்பதையும் தெரிந்து

கொள்ள விரும்பினுன். வேற்றுமையில்லாத அந்த உலகத்திலாவது இவரை நெருங்கிப் பணிவிடை செய்யலாம் என்பது தன் ஆசை என்ருன். அன்றிரவிலும் கனவிலே வரதர் தோன்றினுர் : 'கதிபெறுவதற்கு ஆண்டவன் பணி போதாது, அடியவராகிய மக்களுக்கும் பணிபுரிதல் வேண்டும்' என்பதை வற்புறுத்தி மறைந்துவிட்டார்.

அதற்கு மறுநாளிலேயே திருக்கச்சி நம்பி தாம் உடுத்திருந்த பட்டுக்கரைப் பரிவட்டத்தை (பட்டாடையை) ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு வண்டிக்காரன் போல் வேடம் பூண்டு காஞ்சியிலிருந்து திருவரங்கம் சென்ருர். அங்கே பெரியநம்பி என்பவருக்கு வண்டி ஓட்டிப் பணி புரியலானுர். அப்படியிருக்க ஒரு நாள் வழியிலே பெருமழை பெய்தது. வண்டிக்காரன் உடையும் மாசடைந்து சேறு படிந்ததாயிற்று. அந்த நிலையிலே தான் இவரது பணியும் தனிப்பெருஞ் சிறப்புற்றதாம். பட்டாடையில் மாசு படியாது கச்சி வரதருக்குப் பணியாற்றிவந்த போது நிச்சயமாகாத நற்கதி இப்போது தான் நிச்சயமாயிற்ரும்.

கச்சி நம்பியும் ரஷ்ய நம்பியும்

இதே மாதிரி ஒரு வரலாறு ரஷ்யாவிலும் வழங்கியதுண்டு (ஸோவியத் ரஷ்யாவில் வழங்குகிறதோ, என்னவோ தெரியாது). காஸியன் என்று ஒரு பக்தர்; நிக்காலஸ் என்று வேருெரு பக்தர். காஸியன் என்பவரின் விழா நாள் நாலு வருஷத்திற்கொரு தரம் - அதாவது 'லீப்' வருஷத்தில்-வருகிறது. நிக்காலஸ் என்ற பக்த மணிக்கோ வருஷத்திற்கு நாலு தினங்களில் விழா நடக்கிறது. காரணம் என்ன? ஒரு ரஷ்யக் கதை சொல்லுகிறது.

இரண்டு பக்தர்களும் பரமண்டல நாதரிடம் போய் நிற்கிருர்கள். காஸியன் விலட்சணராய் மாசுபடாத உடையில் வந்திருக்கிருர். நிக்காலஸ் என்பவரோ சேறுபடிந்த அழுக்கு உடையில் வந்து நிற்கிருர்.

'என்ன காஸியன்? நீர் வரும் வழியிலே மண்ணுலகில் கண்டதென்ன?' என்று கேட்கிருர் பரமபதநாதர்.

'ஒரு குடியானவன் வண்டியோடு சேற்றில் சிக்கிக்கொண்டான்' என்று பதில் வருகிறது.

'ஏனே நீர் உதவிசெய்யவில்லை?'

'இந்தத் தூய உடை மாசடையுமே என்று தான்; அழுக்குடையில் சன்னிதானத்திற்கு வரலாமா?'

பிறகு பரமபதநாதர் அடுத்துநிற்கும் பக்த மணியை நோக்கி 'ஏன் தானே, நிக்காலஸ்! இந்த அழுக்குடையில் நம் சன்னிதிக்கு வந்து சேர்ந்தீர்?' என்று வினவுகிருர்.

'அந்தக் குடியானவனையும் வண்டியையும் சேற்றிலிருந்து தூக்கிவிட்டதால் பீதாம்பரத்தில் அழுக்கேறிவிட்டது' என்று பதில் வருகிறது.

பகவான் உடனே மேலே சொன்னபடி நிக்காலஸ் என்ற ரஷ்யநம்பியின் விழாவை ரஷ்ய மக்கள் ஒவ்வொரு ஆண்டிலும் கொண்டாட வேண்டும் என்கிருர். காஸியன் என்ற ஆசார சீலருக்கோ நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை விழாக் கொண்டாடுவதே போதும் என்கிருர்.

ரஷ்ய நம்பியின் கதை புராணரகத்தைச் சார்ந்தது தான். திருக்கச்சி நம்பி கதையோ உண்மையான வாழ்க்கைத் துணுக்கு.

* * * *

தன் கடன் அடியேனையும் தாங்குதல் ;
என் கடன் பணிசெய்து கிடப்பதே

என்ற அருள்வாக்கிற்கு, நம்மையும் தாங்கிக் கதி பெறச் செய்வதற்கு ஆண்டவனுக்குப் பணிசெய்து கிடப்பது மட்டும் போதாது; உலகத்திற்குப் பணி செய்வதே முக்கியமானது என்று பொருள் கூறுவதுதான் முழுப் பொருளாகும். உலகப் பணியிலே பட்டாடை புழுதிபடியாமல் வர்ணம் கறுக்காமல் தொண்டாற்றுதல் சாத்தியமில்லை. தாழ்ந்தாருக்கும் தாழ்ந்து நின்று, உடையிலும் உடம்பிலும் அழுக்கேறினுலும் உள்ளம் அழுக்குருது பணி புரிவதே சிறந்த நற்பணி. இத்தொண்டு ஒன்றே வழி, இம்மையிலும் மறுமையிலும் ஒருங்கே பேறுபெறுவதற்கு.

மாண்டிஸோரியின் அதிசயக் குழந்தையுலகம்

ரா. லட்சுமி அம்மாள்

பட்டினத்தார் துறவியாகிவிட்டார் என்ற செய்தி நாடுநகரங்களில் எல்லாம் பரவி அந்தப் பிரதேசத்தில் ஆட்சி செலுத்திவந்த அரசன் காதிலும் விழுந்தது. அரசன் ஆத்திரமாக வந்து தனிமையாக உட்கார்ந்திருந்த பட்டினத்தார் முன்னே நின்றான். 'இப்படி ஆண்டியாகி என்னத்தைக் கண்டாய்?' என்று கேட்டான். 'நீ நிற்க நான் இருக்க!' என்று பதிலளித்தார் பட்டினத்தார். அப்பால் என்ன நடந்தது என்று இக்கதையைத் தொடர வேண்டிய அவசியமில்லை. குழந்தையுலகைக் கண்டுபிடித்தவர் என்று பெரும் புகழும் பெற்றிருந்த டாக்டர் மாண்டிஸோரி அம்மையின் வாழ்க்கையிலும் இத்தகைய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இதை அவரே நேரில் என்னிடம் கூறியதுண்டு.

அந்த நாளில், தம் பகீரதப் பெருமுயற்சியின் பயனாக ரோமாபுரியில் உயர்ந்த வைத்தியப்பட்டம் பெற்று அத்துறையில் தமக்கு நாளடைவில் கிடைக்கக்கூடிய பெரும்பதவியையும் எதிர்பார்த்திருக்கவில்லை இந்த அம்மையார். அதற்கு உரிய முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. தமக்குக் கிடைத்திருந்த பல்கலைக் கழகப்பேராசிரியப் பதவியையும் மதித்துத் திருப்தி அடையவில்லை. ஏராளமான வருமானத்தையும் ஆடம்பரமான புகழையும் அறவே புறக்கணித்துவிட்டுச் சிறு பிள்ளைகளுக்கு ஆசிரியராக அமர்ந்து விட்டார் இவர். இது அக்காலத்து இத்தாலியக் கல்வி மந்திரியைப் பிரமிக்கச் செய்துவிட்டது. 'பிரசித்தமானதொரு பெரும்பதவி வகிக்க வேண்டிய நீ ஏன் இப்படிப் பாலர் பள்ளியில் வாத்தியார் தொழிலில் அமரவேண்டும்?' என்று இவரைக் கேட்டுவிட்டார் அந்த மந்திரி.

இந்தக் கேள்விக்கு டாக்டர் மாண்டிஸோரி பட்டினத்தாரைப் போல் அவ்வளவு சுருக்கமாகப் பதில் சொல்லிவிடவில்லை. எனினும் அவ்வளவு உண்மைப்பொருள் பொதிந்ததாக விடையளித்தார். தாம் ஆண்டியாக இருந்த நிலையில் அரசனுக்கும் மேலான பதவி ஒன்றைத் தாம் அடைந்து விட்டதாக பட்டினத்து அடிகள் பதில் சொன்னாரல்லவா? அத்தகைய அதிகார முத்திரை இந்த அம்மையார் கல்வி மந்திரிக்கு அளித்த விடையிலும் அமைந்திருந்தது.

'என்னை உலகம் சிறப்பாக மதிக்கப் போகிறது, என் குழந்தையுலகப் பணிகளுக்காக!' என்றார் குழந்தை — அம்மாவான மாண்டிஸோரி. ஒரு தீர்க்கதரிசனமான விடை இது. பட்டினத்தாரும், அந்த அரசனைச் சிடுக்கிக் கொண்டு, உடைமையின் பெருமையை விடத் துறவுப்பெருமை தான் மேலானது என்ற தனிப்பெருங்கொள்கையை மெய்ப்பிக்க இயலும் என்பதை ஒரு தீர்க்கதரிசனமாகக் கண்டவர் தாம்.

துறவுப்பெருமை பட்டினத்தாரை ஆட்கொண்டு ஞானவைராக்கிய உலகத்தைச் சுட்டிக் காட்டியது. அதே துறவுப்பெருமை, டாக்டர் மாண்டிஸோரியை ஆட்கொண்டு குழந்தையுலகைச் சுட்டிக்காட்டி, 'இதோ இவ்வுலகைக் கண்டு காட்டுவதற்காக நீயும் முற்றத் துறந்த ஒரு ஞானியாக வேண்டும்' எனத் தூண்டிவிட்டதாகக் கருதலாம். இதற்காக அம்மையார் மணவாழ்க்கையையும் துறந்து கன்னியாகவே காலம் கழித்தார். சுருங்கச் சொன்னால் குழந்தைப்பணிக்கே தம் வாழ்க்கையை முழுக்க முழுக்க அர்ப்பணம் செய்துவிட்டார்.

துறவும் தாய்மைப்பண்பும்

பட்டினத்தாரின் கடுந்துறவுநெறி, 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்ற நிலையாமைத் தத்துவத்தை நிலைநிறுத்தப் பயன்பட்டது. மாண்டிஸோரியின் துறவுப் பாதையோ தூய அன்பின் ஆரம்பஒளியைக் குழந்தையின் வாயிலாகக் கண்டு, அந்த

அன்பின் ஜோதியைத் தூண்டிவளர்த்தால் பொதுவாக உலகமும் சிறப்பாகக் குழந்தையுலகமும் நலம் பெறும் என்ற உண்மையை நிலைநிறுத்தியது.

கடுந்துறவியாக இருந்தும் பட்டினத்தார் குழந்தையோடு குழந்தையாக விளையாடிக் கொண்டிருப்பார் என்று கூறுவதுண்டு. மாண்டிஸோரி கன்னியாகவே இருந்தும் குழந்தையுலகின் தாயாகி விட்டார். தமது சிற்றன்னையின் புதல்வரைத் தத்து எடுத்துக் கொண்டு அவருடன் வசித்துவந்த இவர், உலகத்துக் குழந்தைகளையெல்லாம் தம் சொந்தக் குழந்தைகளாகப் போற்றி, அக்குழந்தைகளிடமிருந்து பல உண்மைகளைக் கற்றுக் கொண்டு அவற்றை ஒரு புதிய சித்தாந்தமாகப் பிரசாரம் செய்துவந்தார்.

கள்ளங்கவடற்ற குழந்தையுள்ளம் வாய்க்கப் பெற்றிருந்த டாக்டர் மாண்டிஸோரியின் தாய்மைப்பண்பே, துறவு மனப்பான்மையுடன் குழந்தைப்பணியில் இவர் ஈடுபட்டிருந்ததற்கு ஒரு முக்கிய காரணமாகும் என்னலாம். ஒரு தாய் தன் குழந்தைக்காகத் தன் போக போக்யங்களைத் துச்சமாக மதித்துத் துறப்பதையும், தன் வசதிகளைக்கூடத் துறந்து அக்குழந்தைக்காகவே வாழ்வதையும் காண்கிறோமல்லவா? குழந்தை, ஒரு தாயின் தன்னலம், பேராசை முதலான குறைகளைப் போக்கி இதயமாற்றத்தை ஏற்படுத்தி வாழ்க்கையை அன்புமயமாக்குவது போல், மாண்டிஸோரி என்ற இக் குழந்தையம்மாவின் வாழ்க்கையையும் புரட்சிகரமாக மாற்றி மலரச் செய்து விட்டது என்பதை, நான் இந்த அம்மையாருடன் நெருங்கிப் பழகி நேரில் அறிந்து கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு தாய்க்கும் தன் குழந்தை ஓர் அற்புதம் தான். குழந்தை போல் தாயின் இதயத்தை மாற்றிவிடக் கூடிய மகத்தான சக்தி வேறொன்றுமில்லை. இத்தகைய இதயமாற்றம், தாய்மைப்பண்புடன் குழந்தைக்கல்விக்கு ஓர் உறுதியான அடிப்படைத் தத்துவத்தை அமைக்க அரும்பாடு பட்டு வந்த டாக்டர் மாண்டிஸோரியிடம் நிலைபெற்றிருந்தது என்பதையும் நான் நன்றாக அறிந்து கொண்டிருக்கிறேன். இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் முதல் முதல் நான் இக்குழந்தைக் கலைஞரை அடையாற்றில் சந்தித்தபோதே, இவரது குழந்தையுள்ளமும் தாய்மைப்பண்பும் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டன.

ஒவ்வொரு குழந்தையையும் நமக்கு உதவி செய்ய வந்த ஒரு கிறிஸ்து முருகன் அல்லது திருஞானசம்பந்தராக மதிக்கவேண்டும்; மதித்துப் பணிவுடனும் பொறுமையுடனும் குழந்தைப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதை, டாக்டர் மாண்டிஸோரி பல்வேறு சந்தர்ப்பங்களில் பல விதமாக வற்புறுத்தி வந்திருக்கிறார். 1939 — ஆகஸ்டுமாதம் இந்தியாவுக்கு வந்து தியஸாபிகல் ஸொஸைடி என்ற திவ்யஞானசங்கத்தில் தங்கித் தாம் கண்ட புதிய குழந்தைக் கல்வியுலகைப் பிறரும் கண்டு இன்புற்று இதய மாற்றமும் பெற்றுப் பணிபுரியவேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

அறுபத்தேழு வயதுச் சிறுமியாக அன்று இவரைக் கண்டேன், அமைதி சிறப்பாக நிரம்பியிருந்த அடையாற்றிலே. இவரோ குழந்தையை ஆயிரம் வயதுப் பெருங்கிழவனை குருநாதன் என்று மதித்ததாகத் தெரிந்து கொண்டேன். இந்தக் குருநாதன் அடையும் அதிசய மாறுதல்களைக் குறித்து இவர் உணர்ச்சி ததும்பப் பேசியதைப் பன்முறையும் கேட்டிருக்கிறேன். 'ஒரு வைத்திய விஞ்ஞானி இப்படிக் கற்பனைக் கோபுரத்திலிருந்து பேசுகிறாரே' என்று நான் அதிசயித்ததும் உண்டு. உண்மையில், குழந்தையிடத்திலேயே உபதேசம் பெற்றுக் குழந்தைக் கலைஞர் பேசும் பேச்சே அது என்பதை நாளடைவில் உணர்ந்து கொண்டேன்.

குழந்தையுலகின் அன்னையாகக் கன்னி மாண்டிஸோரி மாறிவிட்ட அதிசயக்கதை தான் இவரது வாழ்க்கைவரலாறு. இவரது வாழ்க்கைக் கதையைத் தமிழர்களுக்கு நன்கு விளங்குமாறு (மாண்டிஸோரி காணும் குழந்தைமாண்பு) என்ற என் புத்தகத்தில் சொல்லியிருக்கிறேன். இந்த வாழ்க்கையின் மலர்ச்சியும் கனிவுமே இவரது புதுமுறைக் குழந்தைக் கல்வி. ஆனால் இதை ஒரு கல்வி முறையாகக் கூட இவர் ஒப்புக்கொள்வதில்லை. குழந்தையோடு ஆசிரியன் கலந்து கற்றுக் குழந்தைவளர்ச்சிக்கும் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் இடையூறுகள் நேர்ந்துவிடாமல் சூழ்நிலை அமைத்துக் கொடுக்கவேண்டும்

என்ற மாண்டிஸோரி உபதேசத்திலே முறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் இடம் எங்கே?

மாண்டிஸோரி காட்டும் குழந்தைத் தத்துவம்

மாண்டிஸோரி கண்டு காட்டிய குழந்தை வாழ்வின் இரகசியங்களும், அடிப்படை அம்சங்களும், இன்று பல சிந்தனையாளர்களுக்கும் கல்வித்துறை நிபுணர்களுக்கும் ஓரளவு பொதுவுடைமையாகிவிட்டன. மாண்டிஸோரியின் கொள்கைகளைத் தொடர்ந்து தழுவியே குழந்தையின் அதிசய உலகம் இன்றளவும் அங்கும் இங்குமாகச் சில அறிஞர்களால் ஆராயப்பட்டு வருகிறது. இவர்களில் சிலர் மனிதவாழ்க்கையின் ஆரம்பமான முதற் சில மாதங்களில் நிகழ்வன குறித்துச் சில முக்கியமான விஷயங்களை ஆராய்ந்து கவர்ச்சியாக வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றுள் அதிமுக்கியமான ஒன்று, தன்னைத் தவிர வேறொன்றையும் அறியாதது போலிருக்கும் குழந்தை — புதிதாய்ப் பிறந்த குழந்தை — சூழ்நிலையுடன் தொடர்பு கொள்ளுகிறதா என்பது. இல்லையென்று தானே தோன்றுகிறது; உரையாடித் தொடர்பு கொள்வது சாத்தியமில்லை என்பதும் நிச்சயமல்லவா? ஆனால் இக்குழந்தை உலகத்துடன் தொடர்பு கொள்ளத்தான் செய்கிறது என்பது இன்று நிச்சயமாகிவிட்டது. உரையாடி உறவுகொள்ள இயலாவிட்டாலும் ஸ்பரிசத்தாலும் இனிய ஒலிகளாலும் தொடர்பு கொள்வது சாத்தியமே. தாயின் ஸ்பரிசமும் தாலாட்டும் குழந்தையின் இயற்கை — வேகங்கள் சரியாகத் தொழிற்படுவதற்கு அவசியமானவைதாம்.

தாயின் அன்புக்கைகளின் ஸ்பரிசத்திலிருந்தே குழந்தைவளர்ச்சியின் தொடக்கம் ஏற்பட்டுவிடுகிறது. ஒவ்வொரு புதிய பொருளையும் வாய்க்குக் கொண்டுபோகிறது குழந்தை; இதனால் நாவினாலும் உதட்டாலும் பொருளைச்சோதித்துக் கண்டுபிடிக்கும் ஆற்றல் ஏற்படுகிறது. சுவைத்துப் பார்த்து உணர்ந்து கொள்ளும் ஆற்றல் நாளடைவில் பெருகுகிறது. 'விரலமுதம் கொண்டு கிடந்தனை !' என்று பிள்ளைத்தமிழில் குழந்தையை நோக்கிக் கூறுவதாக வருவது கவனிக்கத் தக்கது.

உண்பதற்கும் உறங்குவதற்கும் மட்டுமே போதுமானதாக இருந்த சக்தி பிறந்த இரண்டு வாரங்களுக்குப் பின் மெல்லமெல்ல வளர்ச்சி பெறுவதைக் காண்கிறோம். இந்த நிலையில் விளையாட ஏதாவதொன்று தேவைப்படுகிறது. இந்த விளையாட்டுணர்வு ஏதாவதொன்றைச் சுவைத்துக் கொண்டிருக்குமாறு தூண்டுகிறது. இதற்கு வசதி குழந்தைக்கு அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இப்படியெல்லாம் குழந்தைவளர்ச்சி பற்றி ஆராய்ச்சிகள் செய்துவருவோர் குழந்தை எப்படிப் பேசக் கற்றுக்கொள்ளுகிறது என்பது குறித்து விரிவாகச் சோதனைகள் செய்து பார்த்திருக்கிறார்கள். அழுகை தவிர வேறு பாஷை தெரியாத நிலையிலிருந்து, குழந்தை தன் சூழ்நிலையிலுள்ள பாஷையை வசப்படுத்திக் கொள்ளும் நிலைக்கு வருவது ஓர் அதிசய வளர்ச்சி நிலையைப் புலப்படுத்துகிறது. வளர்ச்சி வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் உள்ளே நிகழ்ந்து வருவது தான் என்பது உறுதி.

'உள்மனம் என்ற பாடசாலையில் தான் குழந்தை கற்றுக்கொள்கிறது ; உள்ளேயிருக்கும் உபாத்தியாயர் எவ்வளவு கெட்டிக்காரர் ! அதட்டாமல் பயமுறுத்தாமல் உணர்ச்சியோடு உணர்ச்சியாய்க் கலந்து உறவாடுகிறார்' என்று இந்த வளர்ச்சிநிலையை வசிகரமாகவும் நாடகத் திறனுடனும் புலப்படுத்தியுள்ளார் மாண்டிஸோரி.

பல்கலைக் கழகம் எவ்வளவு அவசியமானது என்பதை உணர்ந்திருக்கும் நாம், ஒரு வயதிற்கு மேல் இரண்டு வயதிற்குள் குழந்தைக்குப் பாஷை விஷயத்தில் உதவச் சரியான சூழ்நிலையுடன் கூடிய இல்லம் தேவை என்பதை இன்னும் நன்றாக உணர்ந்து கொள்ளவில்லையே என்கிறார் மாண்டிஸோரி. குழந்தைக்குள்ளேயிருக்கும் ஓர் அதிசயசக்திதான் கடினமான பாஷையையும் வசமாக்கிக் கொள்கிறது என்கிறார்.

குழந்தையின் உணர்ச்சிப் பருவங்களைத் தெரிந்து பயன்படுத்திக் கொண்டால், குழந்தையின் அறிவுவளர்ச்சியில் 'அற்புதமே நிகழ்ந்துவிட்டது என்று சொல்லக்கூடிய நிலையில் அபிவிருத்தி காணமுடியும்' என்பதை

முதல்முதல் கண்டு காட்டியவர் டாக்டர் மாண்டிஸோரி. இப்பருவங்கள் குறித்து அதி முக்கிய உண்மைகளை இவர் கண்டு பிடித்துத் தம் 'குழந்தை இல்லங்'கள் வாயிலாக மெய்ப்பித்திருக்கிறார்.

உணர்ச்சிப் பருவங்களுக்கு உரிய பயிற்சி பெற உதவுமாறு ஐம்புலன்களுக்கும் பயன்படத்தக்க பல்வகை உபகரணங்களைக் கண்டு பிடித்திருக்கிறார் டாக்டர் மாண்டிஸோரி. இவற்றை உபயோகிக்கும்போது குழந்தைக்குள்ள மகிழ்ச்சியைத் தான் என்னென்பது? இந்த உபகரணங்கள் ஐந்துவயதுவரை நிலவுகின்ற உணர்ச்சிப் பருவத்துக்கு உபயோகமாகின்றன.

இந்தவிதமாக மாண்டிஸோரி அம்மை கண்டு காட்டும் பிள்ளைப்பிராய மர்மங்களை முதியவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்; பெற்றோர் சிறப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் இவற்றைத் தெரிந்து தங்களைச் சரியாகப் பண்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் குழந்தைப் பயிற்சியின் வாயிலாக இவ்வுலகமே ஒரு புதிய உலகமாகப் பரிணமிக்கக் கூடும்.

டாக்டர் மாண்டிஸோரியின் இந்தப் புதுமைப் பெருநெறி, வாழ்க்கையையே மையமாகக் கொண்டு அமைக்கப் பெறும் ஒரு செம்மைப் பெருநெறியாகும். தொழிலை மையமாகக் கொண்டு ஆதாரக்கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்ற கொள்கைக்கும் மாண்டிஸோரியின் கொள்கைக்கும் முரண்பாடு இல்லையென்பது உய்த்துணர்வோருக்கு இனிது புலனாகும்.

★

தழைத்தோங்கி வளர்க!

திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,

(ஆசிரியர்: —'திருக்கோயில்' அறநிலையத்துறை, சென்னை)

—:o:—

தமிழ் நாட்டின் சமய வாழ்வில், திருமடங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்து விளங்குகின்றன. திருமடங்களால் தமிழ் நாட்டிற்கு விளைந்துள்ள நன்மைகளுக்கு அளவே யில்லை. திருநாவுக்கரசர் 1300 ஆண்டுகளுக்கு முன்னரே, **திருப்பூந்துருத்தியில்** 'திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஆங்கொன்று செய்து' திருத்தொண்டு புரிந்தார். **திருப்புகலூரில்** முருக நாயனர் திருமடம் ஒன்று அமைத்திருந்தார். அதன்கண் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலிய பலரும் சென்று தங்கி யிருந்தனர். அதனால், 'பாங்கில் வரும் சீர் அடியார் பலரும் உடன் பயில் கேண்மை நீங்கரிய திருத்தொண்டின் நிலையுணர்ந்து' நெறி நின்றனர். **திருவீழி மிழலையில்** இருந்த திருமடத்தில் தங்கித்தான், திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும், பஞ்சத்தால் வாடி வருந்திய மக்களுக்கெல்லாம் இருபொழுதும் சோறளித்துத் துயர் போக்கினர்.

திருநாவுக்கரசர் பெயரால் **அப்பூதியடிகள்,** 'படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தல்கள் முதலாயுள்ள முடிவிலா அறங்கள் செய்து' முறைமையால் வாழ்ந்து வந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவதிகை சென்றபொழுது, திருநாவுக்கரசர் தொண்டு செய்த சிறப்புடைய தலம் என்று நினைத்து, அத்தலத்தை மிதித்தற்கஞ்சி, அதன் புறத்தே இருந்த **சித்தவடமடம்** என்னும் 'வரிவளர் பூஞ்சோலை சூழ்' மடத்தின்கண் சென்று தங்கினர்.

இத்தகைய பலப்பல செய்திகளால் மிகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே, தமிழகத்தில் எண்ணற்ற பல திருமடங்கள் அமைந்திருந்தன என்பதும், அவைகள் மக்களுக்கு அளவற்ற பல தொண்டுகள் புரிந்து நலம் விளைத்து வந்தன என்பதும் புலனாகின்றன. சிறப்பாக, திருமடங்கள் பலவும் கல்வியைப் பரப்பி அறியாமைப் பிணியினைப் போக்கி வந்தன.

'ஓது புடைசூழ் சிறுவர்களும்
உதவும் பெருமை ஆசானும்,
போதின் விளங்கு தாரகையும்
மதியும் போலப் புணர்மடங்கள்'

எனச் சேக்கிழார் சுவாமிகள் திருமடங்களைப் புகழ்ந்து குறிப்பிட்டிருத்தல், அவைகள் தொன்று தொட்டுச் செய்து வரும் கல்வி அறிவுத் தொண்டின் சிறப்பை, நன்கினிது விளக்குவதாகும்.

இங்ஙனம் சேக்கிழார் பெருமான் புகழ்ந்து போற்றிய செந்நெறியைப் பின்பற்றி, **திருவண்ணாமலையில்** அமைந்து விளங்கி வரும் **ஈசான்ய மடத்தின்** சார்பில், சிறந்த தவ முனிவர்களும், செல்வப் பெருமக்களும் ஆகிய பலர் ஒருங்கு கூடிப் பொறுப்பேற்றுச் **சேவாஸ்ரமம்** என்னும் சிறந்த நிறுவனம் அமைத்து, சிறுவர் இல்லம் - பால வித்தியாலயம் - உயர் துவக்கப் பள்ளி - அந்தர் யோகம் முதலிய பல நல்ல பணிகளைப் புரிந்து வருவது, மிகவும் வியந்து போற்றுதற்குரியதாகும். நூல் நிலையம் - வைத்தியசாலை - கல்வி நிலையங்கள் - உணவு விடுதிகள் - திக்கற்றோர் இல்லங்கள் முதலிய நிறுவித் தொண்டு புரிந்துவரும் **சேவாஸ்ரமம்,** அண்ணாமலை அண்ணல் அருளால் நீடினிது ஓங்கித் தழைத்து வளர்வதாக!

குழந்தை வளர்ப்பு

—: ஆ. கௌசல்யா சங்கர் :—

(முக்கிய சேவிகா, துரிஞ்சாபுரம்)

குழந்தை வளர்ப்பு என்பது ஓர் அருங்கலை. இந்தக் கலையானது மரபு நிலை, சூழ் நிலை என்ற இரண்டு நிலைகளால் இணைக்கப்பட்டது. மரபு நிலையானது வாழையடி வாழையாக வருவது. சூழ்நிலை இடம், பொருள் ஆகிய வற்றிற்கு ஏற்றாற் போல் காலத்திற்கேற்ப உருவாவதாகும்.

"பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை : அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற" எனப் பெருந்தகை வள்ளுவனார் பெரிதும் போற்றுகின்றார். இத் நல்லாய மக்கட் செல்வமானது அதை உடையவர்களுக்கு மட்டும் அல்லாது, நாட்டிற்கும் உலகிற்குமே சிறப்பளிப்பதாகும். ஒரு நாட்டைப் போற்றிப் புகழ்ந்து பேசுவது எதனால்? அந் நாட்டி லுள்ள இயற்கை, செயற்கை வளத்தினால் மட்டுமா? இல்லை. அந்நாட்டில் வாழும் மக்கட் செல்வத்தைப் பொறுத்தே அந்த நாட்டின் பெருமையும் போற்றுதலும் அமை வதாகும். ஆகவே, இச் செல்வத்தை கட்டிக் காத்துக் கருத்தோடு வளர்க்க வேண்டாமா? இக்கலையின் சிறப்பில் ஆணுக்கும் பெண்ணுக் கும் சம பங்கு உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

'குழந்தை வளர்ப்பு' என்பது நான் மேலே குறித்தபடி மரபுநிலை, சூழ்நிலைகளைப் பொறுத்து அமைவதாகும். முதலில் மரபு நிலையைக் கவனிப்போம். ஒரு பெண் கருவுற்ற தும், அவளை அறியாமலே அவள் உள்ளத்தில் தாய்மை உணர்ச்சி உண்டாகின்றது. தன்னைப்போன்ற ஒரு உயிரை உருவாக்கி இந்த உலகிற்குத் தரப்போகின்றோம் என் பதை உணரும்போது அத் தாய் எல்லையில்லா மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறாள்.

"தாய்மைப் பேற்றை எந்த எந்தக் காலங் களில் ஏற்க விரும்பவேண்டும், எப்பொழுது நீக்க வேண்டும்" என்று ஆன்றோர் திட்டமாக வகுத்து உள்ளனர். காரணம் "எதிர் காலத்தில் குழந்தை சிரிய நிலையில் விளங்கவேண்டும் ; ஒவ்வொரு உயிரும் நம் நாட்டு உடைமை" என்று அக்காலப் பெருமக்கள் நினைத்து வாழ்ந்தனர்.

ஏன் இதைக் கூறுகின்றேன் என்றால், குழந்தை வளர்ப்பு தாயின் கர்ப்பத்திலிருந்து துவங்குகின்றது. "கர்ப்ப காலத்தில் தாயின் மன நிலையைப் பொறுத்தே குழந்தையின் குணமும் செயலும் அமைகின்றன" என்று உள நூல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். எடுத்துக் காட்டாக, விரத்திற்கு சிவாஜியை யும் நேதாஜியையும், தியாகத்திற்கு காந்தி அண்ணலையும், பண்பிற்கு வினோபாவையும் கூறலாம். இவர்களுடைய தாய்மார்கள் தத்தம் மக்களுக்குக் கருவிலேயே இவைகளை ஊட்டிய தாக வரலாறு கூறுகின்றது.

தாய்மைக் காலத்தில் நேரிடும் துயர நிகழ்ச்சி, தீய எண்ணம், அச்ச உணர்வு போன்றவைகளுக்கு மனதில் இடங் கொடுத்த லால், குழந்தை பிறந்து வளர வளர அவை களின் பிரதிபலிப்பைக் குழந்தையினிடத்தில் கட்டாயமாகக் காணலாம்.

ஆக, குழந்தை வளர்ப்பு, தாயின் கர்ப்பத் தில் துவங்குவதால் அந்தத் தாயை நல்ல சூழ் நிலையில் இருக்கச் செய்ய நாடும் வீடும் தக்க படி ஏற்பாடு செய்தல் வேண்டும். ஒருவரை நல்லவர் என்று நாடு போற்றுவதும், தீயவர் என்று தூற்றுவதும் அவரவர் குணநலன் களைப் பொறுத்தேயன்றோ? தீய செயல் களுக்கு இரையானவர்களும், தீரச் செயல் புரிந்தவர்களும் தாயினால் உருவாக்கப்பட்ட வர்கள்தான். ஒரு பெண்ணுக்குத் தன் மகனை நல்லவனாக்க இருபது வருடங்கள் வேண்டும். ஆனால், அவனைக் கள்வனாக்க இருபது நிமிடங் கள் போதும். "குழந்தைகளின் எதிர்காலம் எப்போதும் தாயின் செயலில் அடங்கி இருக் கிறது" என்று மாவீரன் நெப்போலியன் கூறி யிருக்கிறான். "தாயின் இதயம்தான் குழந்தை களின் பள்ளிக்கூடம்" என்று அறிஞர் ஒருவர்

கூறியுள்ளார். "தாயைப்போலப் பிள்ளை, நூலைப் போலச் சேலை" என்பது முதுமொழி.

இனி சூழ் நிலைக்கு வருவோம்: குழந்தை ஒரு செல்வக்களஞ்சியம். சுவைக்கச் சுவைக்க இனிக்கும் செழுந்தேன்; "பேசும் பொற்சித்திரம்." குழந்தைகள் நாளுக்கு நாள் படிப்படியாக மெதுவாக வளர்ந்து வரவேண்டியவர்கள். அவர்களுக்கு கவனிப்பு அவசியம். தக்க சமயத்தில் உணவூட்டி, நல்லது கெட்டது விளக்கிக் கூறி, உலக வாழ்க்கை என்ன என்பதை உணருமாறு அப்போதைக்கப் போது போதிக்க வேண்டும். இதை யார் செய்வது? பெற்றோரும் ஆசிரியர்களும்தான் செய்தல் வேண்டும். குழந்தைக்குக் குழந்தை உருவத்தில் எப்படி மாறுபட்டு இருக்கிறதோ அப்படியே குணத்திலும் மாறுபடும். குழந்தை வளர்ப்பதைச் சிலர் கலையாகவும், பலர் வேலையாகவும் கொள்கின்றனர். மகாத்மா காந்திஜி கூறியிருக்கிறார்:— "யோக்கியமான ஒரு வீட்டிற்கு இணையான பள்ளிக்கூடமும் கிடையாது, யோக்கியமான பெற்றோர்களுக்கு இணையான ஆசிரியர்களும் கிடையாது" என்று.

ஆக, குழந்தை வளர்ப்பில் மூன்று விஷயங்கள் மனதில் கொள்ள வேண்டும். 1. உடல், 2. மனம், 3. பண்பு. உடல், உள்ளம் இவைகளில் சீரான வளர்ச்சியையும், நலனையும் காப்பதில் பெற்றோரும் பின் ஆசிரியரும் கவனம் செலுத்த வேண்டியது கடமை ஆகும்.

விவேகானந்தர் சொல்கிறார்:— "நீங்களும் நானும் என்ன செய்துவிட முடியும்? ஒரு குழந்தைக்கேனும் அது அறியாத ஒன்றை நீங்கள் சொல்லிக் கொடுக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. குழந்தை தனக்குத்தானே பாடம் கற்றுக் கொள்கிறது. அதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தலும், வழியிலுள்ள தடைகளை நீக்குதலுமே உங்கள் கடமை. செடி வளர்கிறது. அதை வளரச் செய்பவர்கள் நீங்களா? அதைச் சுற்றி வேலி போட்டு, ஆடு, மாடு மேயாமல் பார்த்துக் கொள்வதே உங்கள் கடமை. செடி தனக்குத் தானே வளர்கிறது."

குறிப்பிட்ட நேரத்தில் தூங்கப்போதல், படுக்கையைவிட்டு எழுந்திருத்தல், மலம் கழித்தல், பல் துலக்குதல், கை கால் முகம் கண் இவைகளைக் கழுவுதல், தலையைச் சரியாக வாருதல், நகங்களில் அழுக்குச் சேராமல் வைத்துக் கொள்ளுதல், தேவையான நேரம் ஓய்வு பெறுதல், குறிப்பிட்ட நேரத்தில் விளையாடுதல், சுத்தமான நீர் குடித்தல், உரிய வேளையில் உண்ணுதல் போன்ற பழக்கங்களை ஏற்படுத்த இளமைப் பருவமே சிறந்த காலம்.

பெற்றோர்கள் தவறான போக்கில் நடந்து கொண்டு, தங்களுடைய குழந்தைகள் மட்டிலும் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்கவேண்டுமென்று கருதுவது சரியாகாது. குழந்தைகள் எது செய்யக் கூடாது என்று பெற்றோர் கருதுகிறார்களோ அதைத் தாங்களும் செய்யாதிருத்தல் வேண்டும்.

குழந்தைப் பருவத்தில் சில செயல்கள் இயல்பாகவும் சில சூழ் நிலையாலும் உருவாகின்றன. எச்சில் துப்புதல், நகம் கடித்தல், விரல் சுவைத்தல், படுக்கையை அசுத்தப் படுத்தல், அச்சம், கோபம், பிடிவாதம், பொறாமை, பழி வாங்குதல், கோள் சொல்லுதல், இம்சித்தல். பொய் பேசுதல் போன்ற தவறான பழக்கங்கள் குழந்தைகளிடம் காணப்படலாம். ஒவ்வொரு தாயும் தன் குழந்தை சிறந்த பேரும் புகழும் பெற்று விளங்க வேண்டும் என்று நினைக்கத்தான் செய்வாள். எண்ணம் மட்டும் போதுமா? குழந்தை வளர்ப்பில் அயர்வும் அலட்சியமும் இல்லாமல் பொறுமையோடு அதிக கவனம் செலுத்த வேண்டும்.

உலக அறிஞர்களும் மேதைகளும் மகாத்மாக்களும் திடீர் என்று தோன்றிவிடுவதில்லை. தன்னைத்தானே உலக வாழ்க்கைக்குத் தகுதியாக்கிக்கொள்ள மரபு நிலை, சூழ் நிலை இரண்டின் துணையும் தேவைப்படுகிறது. பிறவியிலேயே இயல்புகளும் ஊக்கங்களும் மறைந்து அல்லது புதைந்து இருக்கின்றன. அவற்றைக் கண்டறிந்து பயன்படுத்தும் வழிகளைக் காட்டும் பெற்றோர்களே குழந்தை வளர்ப்புக் கலையில் வெற்றி பெற்றவர்கள். குழந்தையின் குறும்பு சில சமயம் கோபத்தைக் கிளறும். அந்தச் சமயம் கோபத்தைக் காட்டாமல் அன்போடு ஆபத்தை விளக்க வேண்டும். ஒவ்வொரு துடுக்கான செயலுக்கும், பெற்றோர் நிதானமும் நிரந்தரமான அன்பு வழியும் கடைப்பிடிக்க வேண்டும்.

அந்தப் பருவத்திற்கு ஏற்றாற்போல் தாய் சற்று உதவி செய்தால் போதும். பழக்கம் வந்துவிடும். பருவத்திற்கு முரணான பழக்கம் செய்தால் குழந்தைகளுக்கு சிடுசிடுப்பு, வீண் பிடிவாதம், வெறுப்பு முதலிய கோளாறுகள் தோன்ற ஏதுவாகும்.

இறகு முளைத்த குருவிக் குஞ்சை "கூட்டை விட்டு வெளியே வராதே" என்று தாய்ப் பறவை தடை செய்கிறதா? இல்லை. பழக விட்டுப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. ஆபத்து என்றால் கூச்சலிட்டுக் காக்கிறது. அதுபோல் நாமும் பருவ காலம் வந்த குழந்தையின் சுதந்திர உணர்ச்சியை எதிர்க்காமலும், அதே சமயம் ஆபத்து நேராமலும் பாதுகாக்க வேண்டும். குழந்தையின் உள்ளம் வளர்வதை நாம் கண்ணால் காண முடியாது. உடல் வளர்வதைக் காணலாம். முற்காலத்திற்கும் தற்காலத்திற்கும் பல மாற்றங்கள் இருப்பதால் அவர்கள் சொல்லும் செயலும் நம் பழக்கங்களுக்கு மாறுபட்டு, நம் சொல்லிற்கு அவர்கள் எதிர்த்துச் சொல்லுவது போல் தோன்றலாம். அதை நாம் புரிந்து கொண்டு எதையும் எதிர்க்காமல் நயமாகவே அபாயங்களை இடித்துச் சொல்லித் திருத்த வேண்டும். அநுபவமே நல்ல ஆசிரியர். ஓரளவு அநுபவத்திற்கும் இடம் கொடுக்க வேண்டும். குழந்தைகளிடையே ஏற்படும் சண்டைகளில் நாம் எவரும் எவருக்கும் பரிந்து பேசக்கூடாது. இந்த விஷயத்தில் தாய்க்குப் பொறுமை மிகவும் அவசியம். குழந்தைகளுக்குப் பெற்றோர்களுடைய அன்பு வேண்டும். அதுதான் உலகில் மற்ற எதையும் விட அவர்களுக்கு மிகவும் அவசியம். அன்பே குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, ஆதரவு எல்லாம். அன்பு இருந்தால்தான் குடும்பத்தில் மற்றவரிடமும் ஒட்டுதலாக இருக்கும். பெரியவனான பிறகும் ஏற்படும் குடும்பப் பற்றுதல் அன்பின் அடிப்படையிலேயே அமைகிறது. குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பது அவசியம். மகிழ்ச்சி இராமல் குழந்தைகள் நல்ல மன வளர்ச்சி அடையமாட்டார்கள்.

பெரியவர்கள் குழந்தையின் இயல்பை மறந்துவிடக்கூடாது. குழந்தைகள் வீட்டு வேலை செய்யவும், அக்கம் பக்கத்தவர்களோடு பழகவும், விளையாடவும் வாய்ப்பளிக்க வேண்டும். சில நேரங்களில் சோம்பேறித்தனமாகப் படுத்திருக்கவுங்கூட அனுமதிக்க வேண்டும். ஒரு குழந்தை "பள்ளிக்குப் போகமாட்டேன்" என்று சொன்னதும் அதற்கான காரணத்தை நாம் ஆராயவேண்டும். பிறகு அதைத் திருப்தி செய்வித்து பள்ளிக்கு அனுப்ப உதவ வேண்டும். பாடத்தில் ஏதேனும் கடினம் இருக்கலாம். பிற குழந்தைகளின் பரிகாசமாகவும் இருக்கலாம். பயமுறுத்தல், பிடிக்காத ஆசிரியர் அல்லது நம் வீட்டிற்கு வந்துள்ள விருந்தினர், இன்னும் பல காரணங்களும் இருக்கலாம். இவைகளை நாம் சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டும்.

பயம், அதிர்ச்சி, கோபம், பொறாமை, வருத்தம், கசப்பு, இவை இல்லாத இலட்சிய வாழ்க்கை அடைவதற்குக் குழந்தைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். "குழந்தைகளை மிகவும் அதிகமாகக் கண்காணிப்பது, நடைமுறையில் ஏற்காத அறிவுரைகளை வழங்குவது போன்ற செயல்களைக் கைவிட வேண்டும்," என்று மாண்டிசோரி அம்மையார் கூறுகிறார்.

தாய்தான் குழந்தையின் எதிர்கால வாழ்க்கை சீராகவும் சிறப்பாகவும் அமைவதற்குப் பொறுப்பாளியாகிறாள். நான்கு அல்லது ஐந்தாம் வயதிலேயே குழந்தை முழு அமைப்பைப் பெற்றுவிடுகிறது. ஐந்து வயதிற்கு உட்பட்ட காலமே உடல், உள்ள வளர்ச்சிக்குப் பெரிதும் உதவக்கூடியது. அதனால்தான் தற்போது 2—5 வயதுப் பிள்ளைகளுக்குப் பால வித்தியாலயங்கள் நிறைய ஏற்பட்டு வருகின்றன.

குழந்தை வளர்ப்பில் ஆசிரியர்களின் கடமை மகத்தானது. அதிலும் பால வித்தியாலய ஆசிரியைகளின் சேவை மிகப் பொறுப்புள்ளதும் சிரமமானதுமாகும். வாழ்வின் நற்பாதையில் சிறுவர்கள் சீராக நடக்க துவக்க முதலே திருப்ப வேண்டும். நம் கொள்கைகளை கட்டாயப்படுத்தி திணிக்கக் கூடாது. நல்லவை தீயவைகளைப் பகுத்துணரப் பயிற்சி அளிக்கவேண்டும். வன்முறையை நீக்கி நன்முறையில் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளக் கற்பிக்க வேண்டும். இளமையில் பயிலும் இந்த வாழ்க்கை நெறி, அவர்கள் பெரியவர்களான பிறகு நல்ல வழியில் செல்ல உதவுகின்றது. மன உறுதியும் தளராத அன்பும் இயல்பான தன்னம்பிக்கையும் உடைய ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப் படும் குழந்தைகள் தாமும் பயனடைவதோடு ஆசிரியர்களுக்கும் வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமையளிக்கின்றனர்.

அண்ணுமலேயில் ஒளிரும் அறிவுச் சுடர்

கே. எம். ரங்கசாமி.

(இன்ஃபா விசேஷ நிருபர்)

★

பாரத நாட்டில் என்றுமே மக்களுக்குக் கல்வி புகட்டும் பொறுப்பைத் தபோதனர்கள் தான் ஏற்று வந்திருக்கின்றனர். வேத காலம் முதல், விதேசிகள் இங்கு அடி எடுத்து வைத்த நாள் வரை முனிவர்கள் அமைதியான வனங்களில் ஆசிரமங்கள் அமைத்து மாணவர்களைத் தங்களுடனேயே வைத்துக் கொண்டு கல்வி கற்பித்து வந்தனர். அரச குமாரர்களானாலும் அந்த ஆசிரமத்தின் கடுமையான கட்டு திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் கல்வி கற்க வேண்டும்.

இத்தகைய ஆசிரமங்கள் பற்றிய கதைகளைப் புராணங்களில் படிக்கும்பொழுது, அவற்றை நேரில் காண வேண்டும் என்ற ஆவல் ஏற்படுவதுண்டு. சமீபத்தில் திருவண்ணுமலேக்குச் சென்றபொழுது அந்த நோக்கம் நிறைவேறியது. அங்கு ஸ்ரீ ராமநாதசுவாமிகளை செயலாளராகக் கொண்டு நடைபெறும் சேவாசிரமம் நடுக்காட்டில் இல்லாவிட்டாலும், கதைகளில் படிக்கும் ஆசிரமங்களில் வர்ணிக்கப்படும் அதே அமைதி அங்கு குடிகொண்டிருப்பதைக் காணமுடிந்தது. பழைய குருகுலக் கருத்து அங்கு புதிய உருவத்தில் செயல்படுகிறது.

சேவாசிரமத்தின் ஆதரவில் அங்கு குழந்தைகள் (நர்ஸரி) பள்ளி ஒன்று, உயர் துவக்கப் பள்ளி ஒன்று, திக்கற்ற சிறுவர்களைப் பராமரிக்கும் அனுதாசிரமம் ஒன்று ஆகிய மூன்றும் நடைபெறுகின்றன. ஈசான்யமடம் அதிபர் ஸ்ரீ ராமநாத ஸ்வாமிகளே இவற்றை நிர்வகித்து வருகிருர். இவற்றில் எங்கு சென்ருலும் அவை உணர்ச்சி யூட்டுவனவாக உள்ளன. குழந்தைகளுக்குக் கல்வி புகட்டி அவர்களின் அறிவை வளர்ப்பதை ஒரு யோகமாகவே செய்து வருகிருர் சுவாமிகள். அங்கு படிக்கும் குழந்தைகள் அவரை அஞ்சத்தக்க ஒரு நிர்வாகியாகக் காணுமல், தங்கள் சொந்தத் தாயிடம் கொண்டாடும் அவ்வளவு உரிமையுடன் அவரிடம் பழகுவது வியக்கத்தக்கது.

சுவாமிகள் அடிக்கடி அவற்றைச் சுற்றிப் பார்க்கச் செல்கிருர். அவரைக் கண்டவுடன் குழந்தைகள் அவரைச் சூழ்ந்து கொண்டு பிய்த்து எடுத்து விடுகின்றன. குழந்தைகளின் பெற்ருேராயிருந்தால் கூட அவ்வளவு விஷமத்தனங்களைப் பொறுத்துக் கொள்வது சிரமம்; ஆனல் சுவாமிகள் அவற்றைப் பொறுத்துக் கொள்வது மட்டுமில்லே — அதில் மூழ்கி ஆனந்தத்தில் திளேக்கவும் செய்கிருர்.

